# சட்டமும் நீங்களும்

# (LAW AND YOU)

12

## குடியியல் சட்ட விளக்கங்கள்

## Understanding the Civil Laws

தொகுப்பாக்கம்:

**K.G. John**

**ATTORNEY-AT-LAW**

இலவச வெளியீடு:

மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,
இல: 238, உட்துறைமுக வீதி,
திருகோணமலை.

# பொருளடக்கம்

1. குற்றவியல் நீதிமன்றங்களில் நடைபெறும் நடவடிக்கைகள்.

2. குற்றவியல் நீதிமன்றம் ஒன்றில் எதிரி ஒருவர் எவ்வாறு விளங்கப்படுகிறார்?

3. குற்றமுறையிலான நம்பிக்கை துரோகம், ஆதனக் கையாடல்

4. மணவாழ்வில் பிறந்த குழந்தையின் தந்தை யார் என்பதை தீர்மானிக்கும் அளவு கோல் என்னவென்று உங்களுக்கு தெரியுமா?

5. வீதி விபத்திற்கு வாகன சாரதிகள் மட்டுமல்ல பாதசாரதிகளும் பொறுப்புக் கூற வேண்டும்.

01

# குற்றவியல் நீதிமன்றங்களில் நடைபெறும் நடவடிக்கைகள்.

குற்றவியல் நீதிமன்றங்கள் பொலிஸார் குற்றம் புரிந்தவரை கைது செய்து காவலில் வைத்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் போது நீதிமன்றம் அவருக்கெதிராக குற்றச்சாட்டினை வகுத்து உரிய விசாரணையின் பின்னர் அவர் குற்றம் புரிந்திருந்தது நிரூபனமானால் அவருக்கு தண்டனையை வழங்குகின்றது. குற்றத்தை பற்றிய தகவல் கிடைத்தவுடன் புலன் விசாரணையை பொலிஸார் ஆரம்பிக்கின்றனர். அவர்கள் குற்றவாளியைக் கண்டு பிடிப்பதிலிருந்து அவரை விசாரணைக்கு உட்படுத்தும் வரையில் பல கட்டங்களாக புலன் விசாரணைகளைச் செய்து குற்றத்தை நிரூபிப்பதற்குரிய தகவல்களை சேகரிக்கின்றனர். பின்னரே நீதிமன்றத்திற்கு குற்றவாளியை முன்னிலைப்படுத்துகின்றனர்.

நீதிமன்றம் விசாரணை செய்து தீர்ப்பை வழங்குகின்றது. ஆகவே குற்றம் பற்றிய ஒரு விடயத்தில் பொலிஸாருக்குள்ள கடமைகளையும் நீதிமன்றங்களுக்குள்ள நடவடிக்கை முறையையும் குற்றம் சாட்டப்பட்டவருக்குள்ள உரிமைகளையும் மற்றும் பலவற்றையும் வகைப்படுத்தி கூறுவதே குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டமாகும். இச்சட்டத்தை முழுவதாக தெரிந்து கொள்ள முடியாது போனாலும் பொதுவாக தெரிந்து கொள்ள வேண்டிய சில தகவல்கள் உள்ளன. அவற்றை தெரிந்து வைத்திருப்பது மிக முக்கியம்.

தவறு ஒன்று பற்றிய தகவல்

குற்றம் அல்லது தவறு ஒன்று புரியப்பட்டவுடன் அது பற்றி இயன்றளவு விரைவாக பொலிஸ் நிலையத்திற்கு அல்லது விசாரணையாளர் ஒருவருக்கு வாய் மொழி மூலமாக அல்லது எழுத்தில் கொடுக்கப்பட வேண்டும். அத்தகைய தகவல் வாய் மொழி மூலமாக பொலிஸாருக்கு அல்லது விசாரணையாளருக்கு கொடுக்கப்படும் போது அத்தகவல் எம் மொழியில் கொடுக்கப்படுகிறதோ அம்மொழியில் அவரால் எழுத்தில் இடப்பட வேண்டுமென்பதுடன் தகவல் கொடுப்பவருக்கு அது வாசித்துக் காட்டப்படுதலும் வேண்டும்.

ஆயினும் தகவலானது எம்மொழியில் கொடுக்கப்படுகின்றதோ அம்மொழியில் அத்தகவலை பொலிஸார் அல்லது விசாரணையாளர் பதிவதற்கு இயலாது இருப்பின் அவ் அலுவலர் அல்லது பொலிஸார் அத்தகவலை எழுத்தில் தர வேண்டுமென தகவல் தருபவரிடம் கேட்க வேண்டும்.

தகவல் தருபவர் அந்த தகவலை எழுத்தில் தர முடியாதவராக இருந்தால் அலுவலருக்கு அவர் கொடுக்கும் மொழியில் அவ் அலுவலர் அல்லது விசாரணையாளருக்கு உள்ள காரணங்களை புரிந்த பின்னர் அத்தகவலை தேசிய மொழிகளான சிங்களம் அல்லது தமிழில் பதிய வேண்டும். அப்பதிவை தகவல் தருபவருக்கு வாசித்துக் காட்டுதலும் வேண்டும். அல்லது தகவல் தருபவருக்கு விளங்கும் மொழியில் அதனை மொழி பெயர்த்துக் கூறுதலும் வேண்டும். மேற்படி தகவல் ஒவ்வொன்றும் எழுத்தில் கொடுக்கப்பட்டிருந்தாலும் சரி அல்லது வாய் மூலமாக கொடுக்கப்பட்டு எழுத்தில் எழுதப்பட்டிருந்தாலும் சரி அந்த தகவலை கொடுப்பவரால் ஒப்பமிடுதலும் வேண்டும்.

மேற்படி தகவல் ஒவ்வொன்றும் எழுத்தில் கொடுக்கப்பட்டிருந்தாலும் சரி அல்லது வாய்மூலமாக

கொடுக்கப்பட்டு எழுத்தில் எழுதப்பட்டு இருந்தாலும் சரி அந்தத் தகவலைக் கொடுப்பவரால் ஒப்பமிடுதலும் வேண்டும்.

மேற்படி தகவல் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும் தகவற் புத்தகத்தில் பதியப்படல் வேண்டும். கொடுக்கப்பட்ட தகவலின் படி அல்லது வேறு விதத்தில் பார்க்கையில் அவ்விடயத்தின் சூழ்நிலைகளை அறிந்தவராக தோன்றுகின்றவரும் அத்தகைய பொலிஸ் நிலையத்தின் எல்லைக்குள் அல்லது விசாரணையாளரின் நியாயாதிக்க எல்லைக்குள் வசிப்பவருமான எவரேனும் ஆளைத் தமக்கு முன் வருகை தருமாறு எழுத்திலான கட்டளை மூலம் கோரலாம். தேவைப்படுத்தப்பட்ட ஆள் கட்டாயம் செல்ல வேண்டும். அவ்வாறு அழைக்கப்படட்ட ஆளை பொலிஸார் அல்லது விசாரணையாளர் விசாரிக்கலாம் என்பதுடன் விசாரிக்கப்படும் ஆளினால் அளிக்கப்பட்ட கூற்று எதனையும் எழுத்தில் இடுதல் வேண்டும். கூற்றைத் தெளிவு படுத்துவதற்காக பொலிஸார் அல்லது விசாரணையாளர் ஏதாவது வினாக்களைக் கேட்டால் அதற்கு கூற்று அளிப்பவர் பதில் அளித்தால் அவ்வினாவும் விடையும் வினா விடை வடிவத்தில் பதியப்படுதல் வேண்டும்.

அத்தகைய பதிவானது கூற்று அளிப்பவருக்கு வாசித்துக் காட்டப்படுதல் வேண்டும். அத்துடன் தனது கூற்றில் எதனையும் சேர்ப்பதற்கு அவருக்கு உரிமையுண்டு. அதன் பின்னர் கூற்றை அளிப்பவர் கூற்றின் இறுதியில் தமது கையொப்பத்தை இடுதல் வேண்டும். இக்கூற்றும் தகவற் புத்தகத்தில் பதியப்படல் வேண்டும்.

**சான்று போதாமையாக இருக்கும் போது...............**

புலனாய்வொன்றின் மேல் பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாக உள்ளவரான அலுவலருக்கு அல்லது விசாரணையாளருக்கு குற்றஞ்சாட்டப்பட்டவரை நீதிவான்

நீதிமன்றத்திற்கு அனுப்பிவைப்பதற்கு தேவையானதும் போதுமானதுமான சான்று இல்லையெனத் தோன்றினால், அத்தகைய பொலிஸ் அலுவலர் அல்லது விசாரணையால் அத்தகைய ஆள் கட்டுக்காவலில் இருந்தால் தவறு பற்றி விளங்குவதற்கு அல்லது விசாரணை செய்வதற்கு நியாயாதிக்கம் கொண்ட நீதிவான் நீதிமன்றத்திற்கு முன்னர் தேவைப்படினும் தேவைப்படுத்தப்பட்ட போதும் தோன்றுவதாக கூறி முறியொன்றை பிணைக்காரருடனோ அல்லது பிணைகாரரின்றியோ நிறைவேற்றியதன் பின்னர் அவரை விட்டு விடுதல் வேண்டும். குறித்த தினத்தில் அழைக்கப்பட்டால் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும்.

## சந்தேக நபரை நீதிவான் நீதிமன்றத்திற்கு முன்னர் முன்னிலைப்படுத்துதல்

புலனாய்வு ஒன்று குறித்த காலப்பகுதிக்குள் முடிக்க முடியாததாக இருக்கும் போதும் மேலும் புலனாய்வு அவசியம் என நம்புவதற்கு ஏதுக்கள் இருக்கும் போதும் பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலகர்கள் அல்லது விசாரணையாளர் அவ்விடயம் பற்றிய அறிக்கையொன்றையும் புலன் ஆய்வின் போது விசாரிக்கப்பட்ட சாட்சிக்காரர் ஒவ்வொருவராலும் அவ்விடயம் பற்றி கூறப்பட்ட கூற்றுகள் எவையேனுமிருப்பின் அவற்றின் சுருக்கத்துடன் நீதிவானுக்கு அனுப்பி வைக்க வேண்டும். இது “B” அறிக்கை என அழைக்கப்படும்.

நீதிவான் அறிக்கையை ஆராய்ந்து அவரை புலனாய்வு முடியும் வரை தடுத்து வைக்க வேண்டுமெனக் கருதினால் அவரை விளக்கமறியலில் 15 நாட்களுக்கு மேற்படாத காலத்திற்கு வைக்கலாம். அல்லது பிணைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அவரை பிணையில் விடலாம். இனி குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிவான் முன் வந்தால் என்ன நடைபெறுகிறது எனப் பார்ப்போம்.

## நீதிவான் நீதிமன்றம்

குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட்டால் அல்லது தோன்றும் படி கேட்கப்பட்டு அவர் தோன்றினால் நீதிவான் அவருக்கு எதிரான குற்றச்சாட்டை தயாரிக்க வேண்டும். அந்தக் குற்றச்சாட்டை குற்றம் சாட்டப்பட்டவருக்கு வாசித்துக் காட்டி அவருக்கு எதிரக ஏன் குற்றத்தீர்ப்பு அளிக்கக் கூடாதெனக் காட்டுவதற்கு அவருக்குக் காரணம் எதுவும் இருக்கிறதாவென அவரிடம் கேட்க வேண்டும்.

குற்றம் சாட்டப்பட்டவர் அவருக்கு எதிராக கூறப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளுக்கு தான் குற்றவாளி என நிபந்தனையில்லா குற்ற ஒப்புதலை அளிப்பின் அவரது கூற்றானது கூடிய மட்டும் அவர் பயன்படுத்திய சொற்களிலேயே பதியப்படுதல் வேண்டும். அத்துடன் நீதிவான் குற்றவாளியென துணிபுரையை பதிந்து சட்டத்திற்கிணங்க அவருக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தண்டனைத் தீர்ப்பை பதிதலும் வேண்டும்.

## குற்றவாளி என்று நீதிமன்றத்தில் குற்ற ஒப்புதல் செய்தவர் மீண்டும் தான் குற்றவாளியில்லை என கூறலாமா?

மேற்படி வினா பல வழக்குகளில் எழுந்தன. இதற்கு காரணம் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் 183 (1)அம் பிரிவின் கீழ் உள்ள பின்வரும் புறநடையாகும். அப்புற நடை தெரிவிப்பதாவது,

183 (1) "..........................ஆயின் குற்றஞ் சாட்டப்பட்டவர் நீதிவானின் அனுமதியுடன் அதன் மீது தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்படுவதன் முன்னர் எந்நேரத்திலும் தான் குற்றவாளி என்று கூறிய முன்னுரையை மீளப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு மன்றுரையை மீளப் பெற்றுக் கொள்ளும் பட்சத்தில் அவர் மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்படவில்லையென்றாற்போன்று

விளக்கத்தை தொடங்க நீதிவான் முற்படுதல் வேண்டும் என்று அப்புற நடையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி புற நடையின் கீழ் குற்றவாளி என்று கூறியவர்கள் பின்னர் தாம் குற்றவாளி என்று கூறிய கூற்றை மாற்றி தாம் சுற்றவாளி எனக் கூறலாமா? என்ற வினா ஆதிகாலம் முதல் சமீப காலம் வரை மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் ஆராயப்பட்டு எல்லாச் சந்தர்ப்பத்திலும் அப்படி மீளப் பெற முடியாது என தீர்க்கப்பட்டது.

இதற்கு பல காரணங்களை மேன் முறையீட்டு நீதிமன்றம் கூறியது. மேலேயுள்ள புற நடையின் முதலாவது வரியில் 'நீதிவானின் அனுமதியுடன்' என்ற சொற்கள் பொருள் இல்லாமல் அல்லது தவறுதலாக உட்படுத்தப்படவில்லையென்றும் கட்டாயம் கவனிக்கப்பட வேண்டிய சொற்களாகவே அவை இருக்கின்றன என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் சுட்டிக்காட்டியதுடன் ஒருவர் தான் குற்றவாளி என்று கூறியது. வரைபாடில்லா கூற்றா? அல்லது நிபந்தனையுடனான கூற்றா? என்பதை நீதிவான் தீர்மானிக்க வேண்டும் என்பதனாலேயே அச் சொற்களும் நீதிவானுக்கு உரிமையும் வழங்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியது. ஆகவே எல்லா நீதிவான்கள் முன்னிலையிலும் தான் சுற்றவாளி என்று மன்றுரையை செய்ய முடியாது என்றும் தான் குற்றாளி என்று எந்த நீதிவான் முன்னிலையில் மன்றுரை செய்தாரோ அந்த நீதிவான் முன்னிலையிலேயே சுற்றவாளி என பின்னர் கூற வேண்டும் என்றும் அந்த நீதிவானுக்கே குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்று கூறியது வரைபாடு இல்லா கூற்றா? இல்லையா? என்று தீர்மானிக்க முடியும் என்றும் ஆகவே தான் நீதிவானின் அனுமதியுடன் என்ற சொற்கள் புகுத்தப்பட்டன என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் கூறியுள்ளன.

குற்றஞ் சாட்டப்பட்டவர் எப்போது வேண்டுமானாலும் தான் குற்றவாளியென்று கூறவும் பின்னர் சில வருடங்களுக்கு

பின்னர் அல்லது மாதங்களுக்கு பின்னர் தான் சுற்றவாளி என கூறினால் நீதித்துறையில் ஸ்தீர தன்மை இருக்க முடியாது எனவும் கூறலாம். ஆகவே குற்றவாளி இல்லை என்று ஒருவர் மன்றுரை செய்யும் முன்னர் பல தடைவை தமது சட்டத்தரணியுடன் அல்லது தானே நன்கு யோசித்து மன்றுரையை மீளப் பெறுவதானால் உடனடியாக அதே நீதிவானின் முன்னர் பெற வேண்டும். இல்லையேல் குற்றவாளி என்பதை சுற்றவாளி ஆக்க முடியாது.

## நீதிவான் நீதிமன்றத்தில் முறைப்பாட்டாளர் சமூகமளிக்காவிட்டால் என்ன செய்யலாம்?

குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையின் 136(1) அ பிரிவின் கீழ் முறைப்பாட்டாளர் ஒருவர் ஒரு முறைப்பாட்டை நீதிமன்றத்திற்கு செய்யலாம். இது "பிறைவேட் பிளைன்ட்" என சாதாரணமானவர்களால் சரளமாக அழைக்கப்படுவதுண்டு.

இவ்வாறு வழக்கு ஒன்றைத் தாக்கல் வெய்து விட்டு முறைப்பாட்டாளர் சமூகமளிக்காவிட்டால் குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்படலாம். ஆனால் முறைப்பாட்டாளர் நியாயமான காலத்திற்குள் தோன்றி அவர் நீதிமன்றத்திற்கு உரிய தினத்தில் வராததற்கு காரணம் சுகவீனம், விபத்து அல்லது அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட வேறு காரணத்தினால் நிகழ்ந்தது என நீதிவானைத் திருப்திப்படுத்தினால் அப்போது நீதிவான் குற்றஞ்சாட்டப்பட்டவரை மீள நீதிமன்றத்திற்கு அழைக்கலாம். வழக்கை தொடர்ந்து நடத்தலாம்.

## முறைப்பாட்டாளர் குற்றச் சாட்டை மீளப் பெறுதல்

முறைப்பாட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக கூறிய முறைப்பாட்டை வழக்கில் தீர்ப்பு அளிக்கப்படுவதற்கு முன்னர் மீளப்பெற விரும்புவதாக நீதிமன்றத்திற்கு தெரிவிக்கலாம். நீதிவான் மீளப் பெற நியாயமான காரணம் இருக்கிறது எனக்

கண்டால் நீதிவான் அதனை மீளப் பெற அனுமதி அளிக்கப்படுவதுடன் அவரை விடுதலை செய்யவும் வேண்டும். நீதிவான் தனது தீர்மானத்திற்கான காரணங்களை பதிவு செய்தலும் வேண்டும்.

**குற்றஞ்சாட்டப்பட்டவர் தலைமறைவாக இருக்கும் போது,**

குற்றம் சாட்டபட்டவர் கட்டாயம் நீதிமன்றத்திற்கு வருகை தருவது அவசியமில்லை அவர் வருவதால் விசாரணைக்கு தடங்கல் விளைவிப்பார் என்று நீதிமன்றம் கருதினால் அல்லது தலைமறைவாக இருந்தால் அல்லது தீவை விட்டுவெளியேறியிருந்தால் நீதிமன்றம் சில நடவடிக்கைகளை எடுத்ததன் பின்னர் எதிரியில்லாமலேயே விசாரணையை தொடங்கலாம். சாதாரணமாக நீதிமன்றத்தில் எதிரியை நீதிமன்றத்திற்கு அழைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதையும் சாட்சிகள் மூலம் நீதிமன்றம் எடுப்பது வழக்கம். கிராம சேவையாளர், குற்றஞ்சாட்டப்பட்டவரின் மனைவி மற்றும் பொலிஸார் ஆகியோரை சாட்சிகளாக அழைத்து குற்றஞ்சாட்டப்பட்டவர் எங்கு இருக்கிறார் என்று தெரியாது என்ற சாட்சியத்தை நீதிமன்றம் சாதாரணமாக எடுக்கும். பின்னர் விசாரணையை தொடங்கலாம்.

குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் ஒருவரின் விளக்கம் நடைபெறும் போது அல்லது விளக்கம் முடிவடைந்த பின்னர் நியாயமான காலத்திற்குள்ளாகி குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் நீதிமன்றத்தில் தோன்றி விளக்கம் முழுவதன் போதும் அல்லது அதன் பாகத்தின் போதும் தாம் நீதிமன்றத்தில் சமூகமளிக்காதிருந்தது நல்லெண்ணத்துடனேயே என நீதிமன்றத்தை திருப்திப்படுத்துமிடத்து நீதிமன்றம் அது வரையும் நடந்த விசாரணையையும் சாட்சிக்காரர்களின் சாட்சியத்தையும் அவருக்கு வாசித்துக் காட்ட வேண்டுமென்பதுடன் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவும் அவருக்கு வாய்ப்பளிக்கவும்

வேண்டும். (இது விளக்கம் முடிவடையாத போதே நடைபெற வேண்டும்).

விளக்கம் முடிவடைந்துள்ள நிலையில் என்றால், குற்றத்தில் தீர்ப்பையும் தள்ளி வைத்தக் குற்றம் சாட்டப்பட்டவர் புதிதாக விளக்கப்படுத்தல் வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும். இதில் முக்கியம் என்னவெனில், குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக வாதாட சட்டத்தரணி ஒருவர் இருந்தால் மேலேயுள்ளவை செல்லுபடியாகாமல் போகலாம் என்பதாகும்.

**நீதிவான் நீதிமன்றத்தில் எதிரி தனக்காக சாட்சியம் அளிக்கலாமா?**

ஒரு குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிரி தற்காப்புச் சாட்சியாக வரலாம். அவர் சத்தியம் செய்து தன் மேல் அல்லது தன்னுடன் இணைந்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டைப் பொய்ப்பிக்க சாட்சியம் அளிக்கலாம். அனால் எதிரியின் சம்மதமில்லாமல் அவரை சாட்சியாக அழைக்கக்கூடாது.

எதிரி சாட்சியம் அளிக்கத்த தவறினால் அதுபற்றி யாரும் அல்லது நீதிமன்றம் குறை கூறக்கூடாது. அத்துடன் அவருக்கு அல்லது அவருடன் சேர்த்துக் குற்றம் சாட்டப்பட்டுள்ளோருக்கு எதிராக எத்தகைய அனுமானங்களையும் கொள்ளக்கூடாது.

முறைப்பாட்டாளர் எதிரி மீது கூறியுள்ள குற்றச்சாட்டை நிரூபிக்க எதிரியையும் ஒரு ஆயுதமாகப் பாவிக்கக் கூடாது என்பது குற்றவியலில் உள்ள கோட்பாடுகளில் ஒன்றாகும். குற்றம் ஒன்று நிரூபிக்கப்படும் வரை எதிரி சுற்றவாளி என்ற அடிப்படை விதி இங்கும் பேணப்படல் வேண்டும்.

## விளக்கம் முடிவு

நீதிவான் குற்றஞ் சாட்டப்பட்ட வரை விளங்க முற்படும் பொழுது முறையே வழக்குத் தொடுநர் தரப்பிலும் எதிராளி தரப்பிலும் அளிக்கக் கூடிய எல்லாச்சான்றுகளையும் எடுத்தல் வேண்டும்.

வழக்குத் தொடுநர் தரப்பில் அழைக்கப்பட்ட எல்லாச் சாட்சிக்காரர்களையும் நீதிவானினால் அழைக்கப்பட்டவர்களும் மீள அழைக்கப்பட்டவர்களுமான எல்லாச் சாட்சிக்காரர்களையும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். முறைப்பாட்டாளரும் குற்றஞ்சாட்டப்பட்டவரும் அல்லது அவரது வழக்குரைப்பவர்களும் அவர்களது வழக்குகளை முறையே உரைக்கத் தொடங்குவதற்கு உரித்துடையவர் ஆதல் வேண்டும். ஆனால் முறைப்பாட்டாளர் அல்லது அவரது வழக்குரைப்பவர் குற்றஞ்சாட்டப்பட்டவராலோ அல்லது அவர் சார்பாகவோ கொடுக்கப்பட்ட சான்றின் மீது விடை என்ற வகையில் அவதானிப்பதையும் கூறுவதற்கு உரித்துடையவர் ஆகாது. சகல சாட்சியங்களும் முடிவடைந்த பின்னர் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என காணின் குற்றவாளி என்ற நிலையையும் குற்றவாளியில்லை எனக் காணின் விடுதலைத் தீர்ப்பையும் வழங்குதல் வேண்டும். குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டவரும் பிணை கேட்கலாம்.

## குற்றத் தீர்ப்பு அளிக்கப்டவர் பிணை எடுக்கலாமா?

தற்போதைய பிணைச்சட்டத்தின் 19 ஆம், 20 ஆம் பிரிவுகள் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள காலத்தில் பிணைக்கு விண்ணப்பிப்பது பற்றி கூறுகிறது. 19 ஆம் பிரிவு நீதிவான் நீதிமன்றத்தால் குற்றவாளி ஆக்கப்பட்டவர் பிணை கேட்பது பற்றி கூறுகிறது.

19(1) ம் பிரிவின்படி நீதிவானால் விடுதலை செய்யப்பட்டவரின் தீர்ப்பை எதிர்த்து சட்ட மா அதிபர் மேன்முறையீடு செய்யும் பட்சத்தில் நீதிவான் நீதிமன்றம் விடுதலை செய்யப்பட்டவரை கைது செய்யும்படி கட்டளையிடும்.

19 (2) ம் பிரிவின் படி நீதிவானால் குற்றவாளியாகக் காணப்பட்டவர் மேன்முறையீட்டுக்கு விண்ணப்பித்தால் அவரது விண்ணப்பத்தின் கீழ் அவரை பிணையில் விட மறுக்கலாம். இது முன்னைய நிலையில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது.

முன்னர் நீதிவான் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டு மேன்முறையீடு செய்தால் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டவர் மேன்முறையீடு கேட்கப்படும் வரையும் பிணையில் விட வேண்டும். *அரசன் எதிர் டொன் மார்டின்* என்ற வழக்கில் 25 புதுச்சட்ட அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அவ்வாறில்லை. 19 (3) (4) (5) ம் பிரிவுகளின் கீழ் மேன்முறையீடு செய்யும் ஒருவருக்கு பிணை கொடுக்கும் பட்சத்தில் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தின்படி அவருக்கு பிணை வழங்குவதா? இல்லையா? எனத் தீர்மானிக்கலாம். பிணை வழங்குவதாயின் அதற்குப் பாதுகாப்பாக காசு அல்லது முறியை எழுத நீதிமன்றம் கட்டளை இடலாம்.

மேல் நீதிமன்றத்தால் ஒருவர் குற்றவாளி ஆக்கப்பட்டால் அவர் பிணை கேட்பதற்கு கட்டாயம் சுவிசேச காரணங்களை விசேட காரணங்கள் இருக்க வேண்டும்.

## களவாடப்பட்ட பொருளை வழக்கு முடிந்ததன் பின்னர் எப்படிப் பெறலாம்?

களவெடுத்ததாக சந்தேகிக்கப்பட்ட பொருளை அல்லது ஏதேனும் தவறு புரியப்பட்டதென்றும் சந்தேகத்தினை உண்டாக்கக் கூடிய சூழ்நிலையில் காணப்பட்ட ஆதனத்தை பொலிஸார் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்து அவ்வழக்கு

முடிவடைந்த பின்னர் அப்பொருளை இழந்தவர் களவு கொடுத்தவர் அதனை தன்னிடம் ஒப்படைக்குமாறு கேட்கலாம். நீதிவான் அதற்குரிய கட்டளையை ஆக்க வேண்டும்.

உரித்துடைய ஆள் கண்டறியப்படா விட்டால் நீதிவான் அதனை தடுத்து வைக்கலாம் என்பதுடன் அப்பொருள் பற்றிய பூரண விபரத்தை கொடுத்து உரியவர் தன் முன்வரும்படி நீதிவான் நீதிமன்ற விளம்பரப் பலகையிலும் வேறு அவரால் தீர்மானிக்கப்பட்ட வழிகளிலும் விளம்பரப்படுத்த வேண்டும்.

சில ஆதனங்கள் பெறுமதிக்கமைய பத்திரிகை விளம்பரத்திடம் இடப்பட வேண்டும். ஆறு மாதங்களுக்குள் இக்கோரிக்கையை ஒருவர் முன் வைக்க வேண்டும். கோரும் அவ்வாதனத்திற்கு கோரிக்கையை முன்வைக்காத பட்சத்தில் அவ்வாதனம் நீதிவானின் கட்டளையின் கீழ் பகிரங்க விற்பனையில் விற்பனை செய்யவும் படலாம். ஆகவே ஆதனத்தை இழந்த ஒருவர் அதனைப் பெற உடனடியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**குற்றவியல் நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி மேலும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை:**

- ஏதேனும் குற்றவியல் நீதிமன்றத்தின் நடவடிக்கை எதுவும் ஞாயிற்றுக்கிழமையன்று அல்லது பகிரங்க விடுமுறையன்று நடைபெற்றதென்ற காரணத்தால் செல்லுபடியற்றதாகாது. செல்லுபடியாக இருக்கும்.

- நீதிவான் நீதிமன்றத்தில் பின்வரும் தவறுகளை இணக்கஞ் செய்து கொள்ளலாம். தண்டனைச் சட்டக் கோவையின் 157, 314, 315, 325, 316, 326, 328, 329, 332, 333, 343, 348, 346, 349, 386, 409, 410, 411, 412, 433, 434, 480, 481, 482, 484, 486 குற்றப்பத்திரிகையில் இப்பிரிவுகள் குறிக்கப்பட்டிருந்தால் கட்சித் தரப்பார் அவர்களிடையே நீதிவானின்

அனுமதியுடன் சமரசம் செய்து கொள்ளலாம். குற்றப்பத்திரிகையை பார்க்க வேண்டும்.

- நீதிவான் ஒருவர் விளக்கம் முடிவடைவதற்கிடையில் ஒரு நீதிமன்றத்தில் இருந்து இன்னுமொரு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டால் புதிய நீதிவான் தொடர்ந்தும் சாட்சிகளை கேட்டு வழக்கை நடத்தி தீர்ப்பைக் கூறலாம்.

- குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தனது குற்றச்சாட்டை ஏற்று நீதிவானிடம் ஒத்த உரை செய்யலாம். இது குற்ற ஒப்புதலாக கருதப்படும். இதன் அடிப்படையில் இதனை சாட்சியமாக நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளலாம். ஆகவே நீதிவானின் முன்னர் குற்ற ஒப்புதல் செய்பவர் இரண்டு முறை ஆலோசித்து பார்ப்பது நல்லது. அவசரத்தில் செய்யக் கூடாது.

மேலே கூறியவை நீதிவான் நீதிமன்றம் ஒன்றில் நடைபெறும் குற்றவியல் நடவடிக்கை பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் என கூறலாம்.

**XXXXXXXXXXX**

# 02

## குற்றவியல் நீதிமன்றம் ஒன்றில் எதிரி ஒருவர் எவ்வாறு விளங்கப்படுகிறார்?

குற்றம் என்பது சட்டத்தால் தடுக்கப்பட்ட செயல் அல்லது சட்டம் செய்யுமாறு கூறியதை செய்யாமல் விடுவது என்று ஓரளவுக்கு கூறலாம். இத்தகைய குற்றம் ஒன்றுக்கு முகம் கொடுக்கும் ஒருவர் எப்படி நீதிமன்றத்தில் விளங்கப்பட வேண்டும் என குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் 164 ஆம் பிரிவில் இருந்து 181 ஆம் பிரிவு வரையில் கூறப்பட்டுள்ளது. ஆகவே அப் பிரிவுகள் கூறுவது என்ன என்பதை பார்ப்பது பலருக்கும் பிரயோசனமானதாகும்.

### குற்றச் சாட்டில் அடக்க வேண்டிய உள்ளடக்கங்கள் என்ன?

குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு அவர் எத்தவறுக்காக அல்லது தவறுகளுக்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார் என்பதை குற்றச்சாட்டு எடுத்துக் கூற வேண்டும். அந்த தவறை தோற்றுவிக்கும் சட்டம் அத் தவறுக்கு ஒரு குறிப்பிட்ட பெயரை அளித்திருக்கும் போது குற்றச் சாட்டில் அத்தவறை அந்தப் பெயரால் மட்டுமே விளக்கப்படலாம். உதாரணமாக கந்தன் மீது கொலைக் குற்றம் சாட்டப்படுகிறது.

அப்போது தண்டனைச் சட்டக் கோவையின் 294 ஆம் பிரிவில் கொலை என்றால் என்ன என்று விபரிக்கப்படும் வரை விலக்கணத்தை கூறத் தேவையில்லை. கொலைக் குற்றம் என்று கூறினால் மட்டுமே போதுமானது. *தலைவர் பேருவளை நகர சபை எதிர் அப்துல் ஹமீட்* என்ற வழக்கில் வீடு உடைத்து களவு எடுத்தமை பற்றிய குற்றச் சாட்டுக்கு எவ்வாறு வீடு உடைக்கப்பட்டது களவு எடுக்கப்பட்டது என்று கூறத் தேவையில்லையென்றும் “House Burgled” என்று

கூறுவது போதுமானது எனத் தீர்மானிக்கப்பட்டது. *நாச்சியா எதிர் மரிக்கார்* என்ற வழக்கிலும் அவ்வாறே தீர்க்கப்பட்டது.

ஆனால் எதிரி செய்யும் தவறு ஒன்றுக்கு அந்த தவறை உருவாக்கிய சட்டம் ஒரு குறிப்பிட்ட பெயரை கொடுத்திருக்க வில்லையெனில் எதிரி மீது எத்தகைய குற்றம் சாட்டப்பட்டு உள்ளது என்பதை அவருக்கு தெளிவுபடுத்துவதற்காக அந்த குற்றம் பற்றிய போதுமான விளக்கத்தை கொடுக்க வேண்டும். உதாரணமாக பிஸ்கால் ஒருவரினால் சட்டமுறையான அதிகாரத்தினால் விற்பனைக்கு விடப்பட்ட ஆதனமொன்றை விற்பனை செய்ய விடாமல் வேண்டுமென்று தடை செய்த ஒருவருக்கு எதிராக இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் 182 ஆம் பிரிவின் கீழ் சோமு என்பவர் குற்றம் சாட்டப்படுகிறார்.

குற்றச் சாட்டானது அச் சொற்களில் அமைந்திருத்தல் வேண்டும். எதிரிக்கெதிரான குற்றம் எந்தச் சட்டத்தின் எந்தப் பிரிவுக்கு எதிராகப் புரியப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதோ அந்தப் பிரிவு குற்றச் சாட்டில் சொல்லப்படடிருக்க வேண்டும். சில வேளைகளில் அரசாங்க வர்த்தமானி மூலம் சில குற்றங்கள் பிறப்பிக்கப்பட்டிருக்கலாம். உதாரணமாக அவசர கால சட்டத்தின் கீழ் பல துணை விதிகள் அல்லது குற்றச் செயல்கள் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன.

ஆகவே அத் தவறுகளை ஒருவர் செய்துள்ளார் என்று குற்றஞ்சாட்டும் போது அந்த வர்த்தமானியின் இலக்கம், திகதி, பிரசுரிக்கப்பட்ட திகதி என்பனவற்றை குற்றச்சாட்டில் குறிப்பிட வேண்டும். *அப்புஹாமி எதிர் ஏக்க நாயக்க* வழக்கிலும் *சிவ சம்பு எதிர் யுவான் அப்பு* என்ற வழக்கிலும் இது எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

குற்றச் சாட்டு அந்த நீதிமன்ற மொழியிலும் எதிரியின் மொழியிலும் எழுத்தில் வரையப்பட வேண்டும்.

ஒரு குற்றம் வரையப்பட்டுள்ளதா என்ற நிகழ்வு காட்டப்பட்டுள்ள குற்றத்தை உருவாக்கத் தேவைப்படும் சட்ட பூர்வமான நிபந்தனை ஒவ்வொன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளன என்ற கூற்றுக்கு சமனானதாகும்.

**குற்றச் சாட்டில் இடம், நேரம், நபர் பற்றிய விபரம்:-**

ஒரு எதிரிக்குத் தாம் சாட்டப்பட்டுள்ள குற்றத்தைப் பற்றி போதுமான விபரங்களை அறிந்து கொள்வதற் கேற்ப அந்தக் குற்றச் சாட்டில் குற்றம் புரியப்பட்ட இடம், காலம், எந்த நபருக்கு அல்லது எந்தச் சொத்துக்கு எதிராக அந்தக் குற்றம் புரியப்பட்டது என்ற விபரம் இடம்பெற வேண்டும். குற்றச் சாட்டில் இப் பகுதியே முக்கியம். ஆகவே வாசகர்கள் கவனத்துடன் இப் பகுதியை கவனிக்க வேண்டும்.

பின்வரும் வழக்கான *சட்டமா அதிபர் எதிர் டீன்* என்ற வழக்கில எதிரி 340/= ரூபாவை குற்றக் கையாடல் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டார். இவர் ஒரு குமாஸ்தா. சட்டத்தரணியிடம் குமாஸ்தாவாக வேலை செய்பவர். வழக்கு ஒன்றின் தரப்பினர் இவரிடம் 340/= ரூபாவைக் கொடுத்து அதனை தமது வழக்கில் வைப்பில் இடுமாறு கேட்டுக் கொண்டனர். 18 ஆம் திகதி மார்கழி மாதம் 1951 ஆம் ஆண்டு இதனைக் கொடுத்தனர். ஆனால் அவர் அன்று வைப்பில் இடவில்லை. ஆகவே அவர் அதனைக் குற்றக்கையாடல் செய்ததாக பின்னர் குற்றம் சாட்டப்பட்டார். இவருக்கு எதிராக வழங்கப்பட்ட குற்றச்சாட்டில் 18.12.1951 ஆம் ஆண்டு ரூபா 340/= ஐ குற்றக் கையாடல் செய்யப்பட்டதாக கூறப்பட்டிருந்தது. ஆனால் சாட்சியம் அன்றைய தினம் அக் குற்றக் கையாடல் நடக்கவில்லை என்பதைக் காட்டியது. இதனால் குற்றச் சாட்டில் சரியான விபரம் காணப்படாமல் நீதிவான் அவரை குற்றவாளி ஆக்கியது பிழை என்று உயர் நீதிமன்றம் கூறியது.

ஓர் எதிரியின் மீது நம்பிக்கை மோசடி அல்லது நாணயமின்றி பணத்தை அல்லது அசையும் பொருள் ஒன்றை கையாடல் செய்ததாக குற்றம் சாட்டும் போது பொதுவாக ஒரு தொகை அல்லது பொருளைப் பற்றிய பொதுவான விபரம் எந்த நாளில் இருந்து எந்த நாளுக்குள் அந்தக் குற்றம் புரியப்பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது போன்ற பொதுவான விபரங்களை அந்தக் குற்றச் சாட்டில் குறித்தால் போதுமானது.

உதாரணமாக குற்றம் சாட்டப்பட்டவர் குற்ற முறையான நம்பிக்கைத் துரோகத்தின் பேரில் அல்லது அசைவுள்ள ஆதனத்தை நேர்மையீனமாக கையாடியதன் பேரில் குற்றம் சாட்டப்படும் போது அக்குற்றம் விடயத்திற்கு ஏற்றால் போல் எந்த குழு மொத்தப் பணத் தொகை தொடர்பாக அல்லது எந்த முழு மொத்த அளவு தொடர்பாகப் புரியப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளதோ அந்த முழுத்தொகைப் பணத்தையும் அல்லது அளவையும் அவற்றுடன் அந்தக் குற்றங்கள் எத் திகதிகளுக்கிடையில் புரியப்பட்டதாகச் சொல்லப்படுகிறதோ அத் திகதிகளையும் குறிப்பிட்ட உருப்படிகளையோ அல்லது சரியான திகதிகளையும் குறிப்பிட்ட உருப்படிகளையோ அல்லது சரியான திகதிகளை குறிப்பிடாமலே குறித்துரைத்தல் போதுமானதால் வேண்டும். அது ஒரு தவறுக்கான குற்றச் சாட்டாக கருதப்படும்.

ஆனால் அக் குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ள காலப் பகுதி முதல் திகதிக்கும் கடைசித் திகதிக்கும் இடையில் கணக்கிடும்போது ஒரு ஆண்டை மிஞ்சுதல் கூடாது.

***கூரே எதிர் அரசன்* என்ற வழக்கில் எதிரி,**

“1959 ஆம் ஆண்டு தை மாதம் 7 ஆம் திகதிக்கும் 1960 ஆம் ஆண்டு தை மாதம் 8 ஆம் திகதிக்குமிடையே குற்றக் கையாடல் செய்ததாக அக் குற்றப் பத்திரிகை கூறியது. இந்த வழக்கை உயர் நீதிமன்றம் மேன் முறையீட்டில் தள்ளுபடி

செய்து கூறியது என்னவெனில் இக் குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ள காலம் ஒரு வருடத்தை மிஞ்சி உள்ளது. (1 நாள்) என்பதாகும். இது கட்டாய முறை கேடான குற்றச் சாட்டுப் பத்திரம் என்றும் கூறியது. *டீ சில்வியா எதிர் அரசி* என்ற வழக்கிலும் இவ்வாறு ஒரு வருடத்தை மிஞ்சிய காலப் பகுதி குற்றப் பத்திரிக்கையில் காணப்பட்டதால் உயர் நீதிமன்றம் அதனை தள்ளுபடி செய்தது.

**குற்றம் புரியப்பட்ட முறையை குற்றச்சாட்டில் தெரிவிக்க வேண்டும்.**

எல்லாக் குற்றச் சாட்டுக்களிலும் அன்றி சில குற்றச் சாட்டுக்களில் (**In a Class of case)** கூறப்பட்டுள்ள விபரங்களை மட்டும் அளிப்பது எதிரிக்குத் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை அறிந்து கொள்வதற்குப் போதுமானதாக இல்லை என்று கருதினால் அதனை தெளிவுபடுத்தும் வகையில் சாட்டப்பட்டுள்ள குற்றம் எந்த விதமாகச் செய்யப்பட்டது என்பதையும் குற்றச் சாட்டில் கூற வேண்டும். உதாரணமாக குறித்த ஒரு நேரத்தில் குறித்த ஒரு பொருளை திருடியதற்காக சோமு என்பவர் குற்றஞ் சாட்டப்படுகிறார்.

அத்திருட்டு எவ்வாறு செய்யப்பட்டது என்பதை அக் குற்றச் சாட்டில் எடுத்துக் காட்டத் தேவையில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ராதா என்பவரை மோசடி செய்ததாகக் கண்ணன் என்பவர் குற்றம் சாட்டப்படுகிறார். மோசடி எப்படி நடைபெற்றது என்பதை கூற வேண்டும்.

அதேபோல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மாணிக்கம் என்பவர் பொய்ச் சாட்சியம் சொன்னதாக குற்றம் சாட்டப்படுகிறார். அவரது சாட்சியத்தில் பொய்யானது என்று கூறப்படும் பகுதியை குற்றச் சாட்டில் குறிப்பிட வேண்டும்.

ஆனால் பாலன் என்பவர் மணியம் என்பவரை கொன்றதாக கொலைக் குற்றம் சாட்டப்படுகிறது. எத்தகைய முறையைக் கையாண்டு மணியத்தை பாலன் கொன்றார் என்று காட்டத் தேவையில்லை.

பகிரங்க ஊழியர் ஒருவரை அவரது கடமையை செய்ய விடாமல் மணி என்பவர் தடுத்தார் என்று குற்றம் சாட்டப்படுகிறது. குற்றச் சாட்டில் மணி எவ்வாறு பகிரங்க ஊழியரைத் தடுத்தார் என்பது காட்டப்பட வேண்டும்.

## குற்றச் சாட்டில் உள்ள பிழைகளின் விளைவுகள்

ஒரு குற்றத்தை விபரிப்பதில் அல்லது ஒரு குற்றச் சாட்டில் தேவைப்படும் விபரங்களில் உள்ள பிழை எதுவும் அல்லது குற்றத்தைப் பற்றிக் கூறாமல் அல்லது விபரங்களைக் கூறாமல் விடுதல் எதுவும் அத்தகைய பிழை அல்லது விடுதல் காரணமாக எதிரி தவறாகத் திருப்பப்பட்டார் மற்றும் அது நீதிக்குக் குந்தகம் விளைவித்திருக்கிறது என்று கண்டாலன்றி அவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படலாகாது என சட்டம் கூறுகிறது.

குமார் என்பவரை மோசடி செய்ததாக சாமி என்பவர் மீது வரையப்பட்ட குற்றச் சாட்டில் மோசடி எப்படி செய்யப்பட்டது என்று விபரம் தரப்படவில்லை அல்லது தவறுதலாக விடப்பட்டிருக்கிறது. ஆயினும் குற்றம் செய்த சாமி தன்னைப் பாதுகாக்க பாதுகாப்புக்களை எடுக்கிறார். சாட்சிகளை அழைத்துள்ளார். அந்த கொடுக்கல் வாங்கல்களைப் பற்றியும் தமது விளக்கத்தையும் அளிக்கிறார். இதிலிருந்து மோசடி செய்யப்பட்ட முறையை குற்றம் சாட்டில் சேர்க்காமல் விட்டது முக்கியமல்ல என்று நீதிமன்றம் ஊகிக்கலாம்.

‘ஆ’ என்பவரை ஏமாற்றியதாக ‘அ’ என்பவர் குற்றம் சாட்டப்படுகிறார். ஆனால் அவர் எம்முறையில் ஏமாற்றினார் என்பது குற்றச் சாட்டில் எடுத்துக் காட்டப்படவில்லை அல்லது

பிழையாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ‘அ’ என்பவருக்கும் ‘ஆ’ என்பவருக்குமிடையே பல கொடுக்கல் வாங்கல்கள் இருந்தன. அக்குற்றச் சாட்டில் குறிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கல் எந்தக் கொடுக்கல் வாங்கலை குறிப்பிடுகிறது என அறிவதற்கு ‘அ’ என்பவருக்கு எவ்வழியுமில்லை. ஆதலால் அவர் எதிர்வாதம் எதையும் முன் வைக்கவில்லை. அத்தகைய நிகழ்வுகளிலிருந்து இவ் வழக்கில் ஏமாற்றிய முறையை எடுத்துக் காட்டாமல் விட்டமை முக்கியமானதென நீதிமன்றம் அனுமானிக்கலாம்.

***சட்டமா அதிபர் எதிர் முனசிங்க* என்ற வழக்கை பார்க்கவும்.** அதேபோல் எதிரியானவருக்கு பங்கம் இல்லை என்று நீதிமன்றம் கூறிய வழக்குகளுக்கு *செனவிரத்ன எதிர் டீன்* என்ற வழக்கு உதாரணமாகும்.

உரிமம் இல்லாமல் அபின் வைத்திருந்தார் என்று ஒருவர் குற்றஞ் சாட்டப்பட்டார். சுகாதார அமைச்சின் உரிமம் (Licence) இல்லாமல் அபின் வைத்திருந்தார் என்பது குற்றச்சாட்டு. ஆனால் உண்மையில் உரிமத்தை வழங்குவது பணிப்பாளர், வைத்திய சௌக்கிய பகுதியாகும். இங்கு தவறுதலாக சுகாதார அமைச்சு என குறிப்பிடப்பட்டது.

நீதிமன்றம் இதனால் எதிரி தவறுதலாக விளங்கிக் கொள்ள இடமுண்டு எனக் கொள்ளமுடியாது என்று கூறியது. ஏனெனில் குற்றம் தெளிவாக கூறப்பட்டுள்ளது. (உரிமம் இல்லாமல் அபின் வைத்திருந்தது) உரிமம் இல்லாமல் அபின் வைத்திருப்பது குற்றம் என்பதை எதிரி நன்கு விளக்கியிருக்கிறார். ஆகவே யாருடைய உரிமம் தேவை என்பது பிழையாக இருப்பினும் அது அவரைப்பாதிக்காது என்று கூறியது. *பண்டித கோறளகே எதிர் செல்வநாயகம்* என்ற வழக்கில் மேற் கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

**குற்றச் சாட்டு திருத்தப்படலாம்**

தீர்ப்பை வெளியிடுவதற்கு முன்னர் எந்நேரத்திலும் நீதிமன்றம் குற்றச் சாட்டை திருத்தலாம். தேவைப்படின் புதியவற்றை சேர்க்கலாம்.

பல வழக்குகளில் உயர் நீதிமன்றம் கூறியுள்ளது என்ன வெனில் அவ்வாறு குற்றச்சாட்டை திருத்தும் போதும் சேர்க்கும் போதும் எதிரியின் நிலை பாதிக்கப்படக் கூடாது என்றாகும். (The Court should not alter or ADD to any Charge to the prejudice of the Accused Person)

பின்வரும் நடவடிக்கை முறையை நீதிமன்றம் குற்றச் சாட்டை திருத்திய பின்னர் அல்லது சேர்க்கப்பட்ட பின்னர் கைக் கொள்ள வேண்டும் என எதிர் பார்க்கப்படுகிறது.

1) திருத்தத்தையும் சேர்க்கையையும் எதிரிக்கு படித்துக்காட்டப்பட வேண்டும். அத்துடன் விளக்கியும் காட்டப்பட வேண்டும்.

2) ஒரு குற்றச்சாட்டு திருத்தப்பட்ட தன் பின்னர் அல்லது சேர்க்கப்பட்டதன் பின்னர் உடனடியாக விசாரணையைத் தொடர்வது எதிரியின் தற்பாதுகாப்புக்கு குந்தகத்தை விளைவிக்காது அல்லது அந்த வழக்கை கொண்டு நடத்த அரச தரப்பினருக்கு இடையூறாக இராது என்று நீதிமன்றம் கருதினால் அதன் தற்துணிபின் பேரில் அத்தகைய மாற்றம் செய்யப்பட்ட பின்னர் மாற்றியமைக்கப்பட்ட குற்றச் சாட்டை மூலக் குற்றச் சாட்டாக இருந்தாற் போன்று விளக்கத்தை தொடர்ந்து நடத்தலாம்.

3) குற்றச் சாட்டில் செய்யப்படும் மாற்றம் அல்லது சேர்க்கை எதிரிக்கு அல்லது வழக்குத் தொடு நபருக்கு

குந்தகம் விளைவிக்கத்தக்கது என்று கருதினால் நீதிமன்றம் விசாரணையை ஒத்திவைக்கலாம்.

மேலே உள்ளவாறு குற்றச் சாட்டு திருத்தப்படுதல் பற்றி முன்னாள் பிரதம நீதியரசர் பஸ்நாயக்க வெலே கொட என்ற வழக்கில் கூறிய கருத்து கவனிக்கத்தக்கது. இவரது கருத்துப்படி விளக்கம் தொடங்குவதற்கு முன்னரே திருத்தங்களை செய்ய வேண்டுமென்றும் விளக்கம் தொடங்குவதற்கு முன்னர் எதிரி தான் குற்றவாளியா? சுற்றவாளியா என்று கூறி விடுவதால் அதன் பின்னர் அவரது கூற்றைப் பார்த்து குற்றச் சாட்டைத் திருத்தக் கூடாது என்று கூறியுள்ளார்.

ஆனால் குணசேகர நீதியரசர் ஒரு விளக்கம் தொடங்குவதற்கு முன்னர் குற்றச் சாட்டை திருத்த முடியாது என்றும் விளக்கம் தொடங்கியதற்கு பின்னரே திருத்தலாம் என்றும் கூறியுள்ளதுடன் குற்றச்சாட்டு ஒன்று காலாவதி வரம்புக்கு முன்னரே சேர்க்கப்பட வேண்டுமென்றும் "only prescribes the point of time before which an indictment or a charge can be altered" என *அரசி எதிர் சுரபியல்* என்ற வழக்கில் தெரிவித்துள்ளார்.

குற்றச் சாட்டு திருத்தப்பட்ட பின்னர் அல்லது சேர்க்கப்பட்டதன் பின்னர் வழக்கு ஒத்திவைக்கப்பட்டால் வழக்குத் தொடுநர் அல்லது எதிரி தேவைப்படின் சாட்சியம் கூறிய ஒருவரை மீளவும் சாட்சியம் அளிக்க அழைக்கலாம் அல்லது புதிய சாட்சியை அழைக்கலாம். குற்றச் சாட்டு ஒன்று திருத்த முன்னர் அதனைப் பற்றி தமது நிலையைக் கூற எதிரிக்கும் வழக்கு தொடுனருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். அதன் பின்னரே வழக்கை தொடர்ந்து நடத்துவதா? அல்லது புதிய விளக்கம் நடத்துவதா? என நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும் என பிரபல்யமான வழக்கான *அரசி எதிர் குலரத்ன* என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது.

குற்றச் சாட்டு ஒன்று திருத்தப்படட்தன் பின்னர் புதிய சாட்சியாளர்களையும் தடயப் பொருட்களையும் மேலதிகமாக சாட்சியாளர் பட்டியலில் சேர்க்கலாமா? என்ற வினாவிற்கு நீதியரசர் டயஸ் அவர்கள் பின்வருமாறு கருத்து தெரிவித்துள்ளார். ‘‘எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டு திருப்தியான சாட்சியங்களின் அடிப்படையில் சுமத்தப்படவில்லை என்பதையே புதிய சாட்சியாளர்களை சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையில் இருந்து பெறப்படுவதால் எதிரியானவர் முறையற்ற விதத்திலேயே நீதிமன்றத்தின் முன்னர் விளக்கத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றார்’’ என்று *அரசன் எதிர் அருன் அப்புஹாமி* என்ற வழக்கில் தெரிவித்துள்ளார்.

*அரசன் எதிர் மைகல் பெர்னாண்டோ* வழக்கில் பின்வரும் கருத்து தெரிவிக்கப்பட்டது. ‘‘முறையான வழக்கொன்றை எதிரிக்கு விரோதமாக வைக்கும்போது சாட்சியங்கள் குறைபாடு இல்லாமல் இருக்க வேண்டும்’’ என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே புதிய சாட்சியங்களை அழைப்பதை நீதிமன்றங்கள் விரும்புவதில்லை. இந்தியாவிலும் இதே கருத்தே காணப்படுகிறது என்பதை அவர்களது குற்ற விசாரணை முறைச் சட்டம் தெரிவிக்கிறது.

**ஒன்றுக்கு மேற்பட்ட குற்றங்களுக்கான விசாரணை**

ஒரே பரிவர்த்தனையில் (Same Transaction) அடங்கக்கூடியதும் செயல்களின் ஒரே தொகுப்பாக அமையக் கூடியதும் ஆன ஒன்றுக்கு மேற்பட்ட பல குற்றங்களை ஒருவர் புரிந்துள்ளபோது அத்தகைய ஒவ்வொரு குற்றத்திற்காகவும் அந்த நபர் மீது குற்றச் சாட்டு வரையப்பட்டு ஒரே விளக்கத்தில் அவரை விளங்கலாம். உதாரணமாக *எதிரி ஒரு பஸ் ஓட்டுனர்*. அவர் பஸ்ஸை செலுத்தும் போது பாதசாரி ஒருவரை மோதிவிட்டார். இவர் மோதியது பாதசாரிகளின் சரணாலயமான மஞ்சள் கோட்டுக்குள்ளாகும்.

மோதியதன் பின்னர் இதனைப் பற்றி பொலிஸாருக்கு அறிவிக்காமல் தொடர்ந்தும் பஸ்ஸை செலுத்தி கொண்டு சென்றார். இவர் பின்னர் கைது செய்யப்பட்டு இவரின் மேல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் பின்வருமாறு (1) பஸ்ஸை கவனயீனமாகச் செலுத்தி பாதசாரி ஒருவரை அவரது பாதுகாப்பு பகுதியான மஞ்சள் நிறக் கோட்டுக்குள் மோதிவிட்டு சென்றார். (2) இந்த விபத்தை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிக்காமல் சென்றது. இந்த இரண்டு குற்றச் சாட்டுக்களும் ஒரு பரிவர்த்தனையில் நடைபெற்றதால் இக் குற்றங்களை இணைத்து ஒரே விளக்கத்தில் விளங்குவது சரியானது *எனடொன் அல்பட்* வழக்கில் தீர்க்கப்பட்டது.

**வழக்குகள் பலவற்றை இணைப்பதில் உள்ள நியாயம்**

இந்தியன் வழக்கான Queen Empress vs Jawla Prasad (ILRT all 174 (FB) என்ற வழக்கில் நீதியரசர்கள் கூறியது என்னவெனில் "If the Accused is to be tried in one trial upon different charges on different evidence if is not unlikely that the court might get prejudiced against the accused person the above basic rule intends to avoid such a situation என்பது. ஒரே விளக்கத்தில் பல குற்றச் சாட்டுக்களை சார்த்துவதற்கு உள்ள இன்னுமொரு காரணம் என்னவெனில் ஒரு தனிப்பட்ட செயல் அல்லது பல்வேறு செயல்களின் தன்மையில் இருந்து எத்தகைய குற்றங்கள் புரியப்பட்டுள்ளன என்பதை பற்றிய சந்தேகம் தோன்றும்போது எதிரியின் மீது அத்தகைய எல்லாக் குற்றத்துக்காகவும் குற்றச்சாட்டு வரையப்படலாம். அத்தகைய குற்றங்கள் எத்தனையிருப்பினும் அவற்றை ஒரே சமயத்தில் விசாரிக்கலாம் அல்லது அவர் அத்தகைய குற்றங்களில் ஏதேனும் ஒன்றுக்காகவும் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரிக்கப்படலாம்.

காசோலைகள் மதிப்பிழந்தபோது பொலிஸார் தாக்கல் செய்யும் வழக்குகளில் பின்வரும் மூன்று குற்றங்கள் காணப்படுவதை பலர் காணலாம். (1) வஞ்சனை தண்டனைச் சட்டக் கோவையின் 403 ஆம் பிரிவு (2) குற்றக்கையாடல் 386 ஆம் பிரிவு (3) நம்பிக்கை சொத்து கையாடல் 389 ஆம் பிரிவு. இவற்றில் எதற்கு காசோலை வழக்கப்பட்டது என்ற தெளிவில்லாததால் இவ்வாறு பொலிஸார் வழக்குகளை தாக்கல் செய்கின்றனர். இது சட்ட பூர்வமானதாகும்.

**முடிவுரை**

ஆகவே எதிரி ஒருவர் ஒரு தவறை செய்துள்ளார் என்று பொலிஸாருக்கு ஒருவர் தகவல் கொடுத்ததும் அந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அல்லது அவரால் பணிக்கப்பட்டவர் அத்தவறை புலனாய்வு செய்து குற்றப் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார். அதன் பின்னர் நீதிமன்றம் அவருக்கு அழைப்பாணை அனுப்பி வைக்கும். அவர் நீதிமன்றத்தில் தெரிவுபட்டதன் பின்னர் அவருக்கெதிராக குற்றச் சாட்டுக்கள் வாசிக்கப்பட்டு விளக்கம் நடைபெறும். விளக்கத்தின் பின்னர் அவருக்கு தண்டனை விதிக்கப்படும் அல்லது அவர் விடுதலை செய்யப்படுவார்.

இந்தத் தீர்ப்பில் அதிருப்தியுறும் ஒருவர் மேன்முறையீட்டை அதற்குரிய நீதிமன்றங்களில் செய்யலாம். மேன் முறையீட்டில் நீதிமன்றம் அத் தீர்ப்பை மாற்றும் அல்லது உறுதிப்படுத்தும். இவ்வாறே எதிரி ஒருவர் நீதி மன்றத்தில் விளங்கப்படுகிறார் எனலாம்.

கிறிமினல் வழக்குகள் தற்போது நீதிவான் நீதிமன்றத்தாலும் மேல்நீதிமன்றத்தாலும் விளங்கப்படுகின்றன. அவற்றிற்குரிய மேன் முறையீடுகள் வழக்குகளைப் பொறுத்து மாகாண மேல் நீதிமன்றத்தாலும் மேன் முறையீட்டு நீதிமன்றத்தாலும் உயர்நீதிமன்றத்தாலும் விளங்கப்படுகின்றன. **Xxxxxxxxxx**

## 03

# குற்றமுறையிலான நம்பிக்கை துரோகம் ஆதனக் கையாடல் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியவை.

இலங்கையிலும் இந்தியாவிலும் மேலும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளிலும் பொதுமக்களுக்கு நீதியையும் நியாயத்தையும் வழங்க உதவுகின்ற சட்டங்கள் அப்பொதுமக்களின் மொழியல்லாத பிறமொழியான ஆங்கிலத்தில்தான் பெரும்பாலும் இருக்கின்றன.

இதனால் பொதுமக்கள் நாம் என்ன குற்றம் செய்கிறோம். அதற்குரிய தண்டனை என்ன என்பதை அறியாமல் செய்யும் குற்றங்களும் அதன் பலனாக அவர்களுக்கு கிடைக்கும் தண்டனைகளும் அதிகம்.

ஆகவே நான் எழுதும் கட்டுரைகள் தவறுபுரிந்தால் தண்டனை கிடைக்கும் என்ற பொதுப்படையான அறிவைவிட கூடுதலான அறிவை பெற அதாவது சின்னக் குற்றம் செய்தால் சின்னத் தண்டனை கிடைக்கும் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தில் எழுதப்படுவதால் தண்டனைச் சட்டக்கோவைகளின் பிரிவுகள் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைப் பிரிவுகள் என்பவற்றை அப்படியே எழுதுவதுண்டு.

இதனால் சாதாரண மக்களுக்கு பொதுப்படையான அறிவைவிட விஷேட அறிவும் கிடைக்க வழியேற்படுகிறது.

இதனால் சாதாரண மக்களிடையே சுயகட்டுப்பாட்டு உணர்வு தோன்ற வழிபிறக்கலாம் என்ற நம்பிக்கை எனக்குண்டு. கட்டுரைகள் நீளுவதற்கு இதுவே காரணமாகும். ஆயினும் பலன் கிடைப்பதால் இம்முறையில் எனது கட்டுரைகள்

அமைகின்றன. ஆகவே பொறுமையோடு வாசகர்கள் இதனை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்று எனது கட்டுரைக்கு விடயப்பொருளாக அமைவது நாளாந்த வாழ்வில் பலர் சந்திக்கும் கஷ்டங்களாகும். நம்பிக்கைக்கு என ஒப்புவிக்கப்பட்ட சொத்தை கையாடல் செய்வது நேர்மையில்லாமல் இன்று ஒருவரின் பொருளை தனது சொந்த உபயோகத்திற்கென மாற்றிக் கொள்வது என்பன போன்றவையாகும். விஷேடமாக வர்த்தகத் துறையில் ஈடுபடுபவர்கள் உயில் எழுதாது இறப்பவர்கள் பராமரிக்கும் சொத்துக்கள், ஆவணங்கள், தர்மஸ்தாபனங்கள் என்பவற்றின் சொத்துக்கள் பல இவ்வாறு அபகரிக்கப்படுகின்றன. இவ்வாறு அபகரிக்கும் பொருட்களை எப்படிப் பெறுவது?, அதனை அபகரித்தவருக்கு தண்டனை என்ன? என்பன பற்றி இனி கவனிப்போம்.

## தண்டனைச் சட்டக்கோவை

இலங்கையில் குற்றங்களை வகைப்படுத்தும் சட்டம் இலங்கைத் தண்டனைச்சட்டக் கோவையாகும். சில குற்றங்களை பாராளுமன்றம் தண்டனைச் சட்டக் கோவையில் அடக்காமல் தனிப்படவும் இயற்றுகின்றது.

உதாரணமாக பயங்கரவாத தடைச்சட்டம், இலஞ்ச ஒழிப்புசட்டம் போன்ற சட்டங்கள் பராளுமன்றத்தால் ஆக்கப்பட்டு அச்சட்டங்களின் கீழ் குற்றம் இழைப்பவர்களுக்கு தண்டனை வழங்கப்படுவதையும் நாம் காணலாம்.

இன்று நாம் பார்க்கப்போவது இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் 386 ஆம் பிரிவின் கீழ் குற்றமாக கூறப்பட்டுள்ள தவறான அசைவுள்ள ஆதனத்தை நேர்மையீனமாக அல்லது சொந்தப்பயனுக்கு மாற்றுதல் என்னும் குற்றத்தையும் 386 ஆம் பிரிவின் கீழ் குற்றமாக

கூறப்பட்டுள்ள குற்றமுறையான நம்பிக்கைத் துரோகத்தையுமேயாகும்.

இக்குற்றங்கள் சர்வசாதாரணமாக எமது நாட்டில் பரவலாக நடைபெறுவதால் அதனைப்பற்றி அறிவது நல்லது. வர்த்தகதுறையில் இது பரவலாக நடைபெறுகிறது.

## அசைவுள்ள ஆதனத்தை நேர்மையீனமாகக் கையாளுதல் அல்லது சொந்த தேவைக்கு பயன்படுத்துதல் 386 ஆம் பிரிவு.

நேர்மையில்லாமல் ஓர் அசையும் பொருளை தன்னுடைய சொந்த உபயோகத்திற்கென மாற்றிக் கொள்வது/கையாடல் செய்வது குற்றமென தண்டனைக் கோவையின் 386 ஆம் பிரிவு கூறுகிறது. இப்பிரிவின்படி ஒரு பொருள் நேர்மையில்லாமல் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். உதாரணமாக ஒருவன் ஒரு பொருள் தனக்குச் சொந்தமானது என நல்லெண்ணத்துடன் எடுத்துக் கொள்கிறான். இந்நிலையில் அவன் மீது திருட்டுக்குற்றம் சாட்ட முடியாது. நல்லெண்ணம் முக்கியமானது. ஆனால் அதன் பின்னர் அப்பொருள் வேறு ஒருவருக்கு சொந்தமானது என தெரிந்து கொண்டு தொடர்ந்தும் அதனை அவன் வைத்திருந்தால் அவன் 386 இன் கீழ் குற்றம் செய்தவனாகிறான்.

எடுத்துக்காட்டாக இந்தியன் வழக்கான *ராம்தயாள்* வழக்கைப் பார்ப்போம். A என்னும் பெண் குழந்தை நெக்லஸ் ஒன்றை கண்டு எடுத்தாள். அதனை C என்னும் தனது நண்பியிடம் ஒப்படைத்தாள். அப்போது B என்பவன் C யிடம் நெக்லஸ் இருப்பதாக அறிந்து கொண்டு அந்த நெக்லஸ் தனது நண்பன் ஒருவனுக்கு சொந்தம் என்றும் அதனை வாங்கி வருமாறு கூறியதாகவும் கூறினான். அவர்களும் அதனை நம்பி அவனிடம் நெக்லஸை ஒப்படைத்தனர். சில மணிநேரத்தின்

பின்னர் பொலிஸார் இதுபற்றி விசாரித்தனர். B தனது முன்னைய நிலையை மீண்டும் கூறியதுடன் இறுதியில் நெக்லஸை பொலிஸாரிடம் ஒப்படைத்தான்.

ஆயினும் அவன் C க்கு கூறியதும் பொலிஸாருக்கு கூறியதும் உண்மையில்லாதது என்று தெரிந்து கொண்டு கூறியதால் பொருளை ஒப்படைத்த போதும் B கையாடல் குற்றத்திற்கு குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இலங்கையில் தீர்க்கப்பட்ட வழக்கொன்றில் ஒருவன் ஒரு கடைக்கு சென்று 25 சதத்தை கொடுத்து ஒரு சிகரெட் வாங்கினான். கடை சொந்தக்காரன் 25 சதத்தை மாற்ற சில்லறை இல்லையென்றும் அயலில் உள்ள கடையொன்றைச் சுட்டிக்காட்டி அக்கடையில் காசை மாற்றிக் கொண்டு வரும்படி கேட்டான்.

அவன் அந்தக் காசை எடுத்துக்கொண்டு மாற்றச்செல்லும் போது அவனது மனம் மாறியது. 25 சதத்தையும் எடுத்துக் கொண்டு சிகரெட்டுக்குரிய காசை கொடுக்காமல் சென்றுவிட்டான். பின்னர் வழக்கில் குற்றவாளியானான். சிகரெட்டை வாங்கும் போது அவன் நல்லெண்ணத்துடனேயே வாங்கினான். ஆகவே அவர் குற்றவாளி இல்லை என அவன் சார்பில் வாதிக்கப்பட்டது.

நீதிமன்றம் ஆரம்பத்தில் அவனது எண்ணம் நல்லெண்ணமாக இருந்த போதும் பின்னர் மாறியதை சுட்டிக்காட்டி பிறருக்குரியது என தெரிந்த பிறகும் அதனை அபகரிக்க முயல்வது 386 இன் கீழ் குற்றம் என தீர்த்தது.

நடைமுறையில் ஏற்படும் நிகழ்வுகளுக்கு சமனான இன்னும் இரண்டு வழக்குகளை பார்ப்போம்.

***சம்சுந்தர் வழக்கு***

A என்பவர் B யிடம்ட பணத்தை கடனாக வழங்கியிருந்தார். B மாதாமாதம் அக்கடனை செலுத்தி வந்தார். ஆனால் A அவருக்கு ரசீது கொடுக்கவில்லை. குடன் கொடுபட்டு முடிந்தது. ஆனால் A அதனை மறந்து B க்கு மீண்டும் பணத்தை கொடுத்து வந்தார். B அதனை பெற்றுக் கொண்டு அமைதியாக இருந்தார். பின்னர் Aதான் இரண்டாந்தவணையும் பணத்தை கொடுத்ததாக அறிந்து பொலிஸில் புகார் செய்தார். அது உண்மையென தெரியவந்தது. நீதிமன்றம் அவர் குற்றவாளி என்றது. Bக்கு தான் வாங்கும் பணம் இரண்டாந்தடவை எனத் தெரிந்தும் வாங்கியதால் பிறர் பொருளை அபகரிக்கும் நோக்கம் இருந்தது என்றது.

**வாடகை வழக்கு**

வாடகையாளர் ஒருவர் வீட்டில் குடிபுகும்போது அந்த மாத இறுதியில் செலுத்த வேண்டிய வாடகையை குடியேறும் தருணத்திலேயே செலுத்தினார். தொடர்ந்தும் மாதத்தின் ஆரம்பத்திலேயே வாடகையை செலுத்தி வந்தார். மாதக்கடைசியில் வீட்டை காலி செய்து கொண்டு போகும்போது இவர் வாடகை செலுத்த வேண்டியிருக்கவில்லை. ஆனாலும் அவர் தான் செலுத்தி வந்த வாடகை முறையை மறந்து வீட்டைக் காலி செய்யும் போதும் அம்மாதத்திற்குரிய வாடகைப்பணத்தை செலுத்தினார். வீட்டுச் சொந்தக்காரரும் அதனைப் பெற்றுக்கொண்டார். பின்னர் வாடகையாளருக்கு தான் இரண்டுமுறை வாடகைப்பணம் செலுத்தியது தெரியவந்தது.

சொந்தக்காரனை மறுநாள் பொலிஸார் விசாரணை செய்தபோது வாடகைக்காரன் மாதத்தின் ஆரம்பத்திலேயே வாடகை செலுத்தி வந்ததும் வீட்டுச் சொந்தக்காரன்

தீயநோக்கத்துடன் இரண்டு முறை வாடகை பெற்றதும் தெரிய வந்தது. வழக்கில் வீட்டுச் சொந்தக்காரன் குற்றவாளியானார்.

ஒரு வீட்டில் வாடகைக்காரன் நீண்டகாலம் வாழ்ந்து வரும்போது ஆரம்பத்தில் அதாவது வீட்டிற்கு வரும்போது செலுத்திய வாடகை மாத ஆரம்பத்தில் செலுத்தப்பட்டது என்பதை மறப்பது உண்டு. இதனை சாட்டாக வைத்து வீட்டு உரிமையாளர் இரண்டு முறை வாடகை பெறுவது தற்போதும் கொழும்பில் பல வீடுகளில் நடைபெற்றது. பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒருவர் 386 ஆம் பிரிவின் கீழ் குற்றவாளியாகின்றார்.

1. ஒரு தடவை நேர்மையின்றிக் கையாடல் செய்தாலும் இப்பிரிவின் கீழ் குற்றமாகும். உதாரணமாக ஒருவருடைய பத்திரத்தை எடுத்து அதனை பின்னர் உரியவருக்கு கொடுத்து விடவேண்டும் என்ற நல்லெண்ணம் இருப்பினும் அப்பத்திரத்தை ஈடாக வைத்து பிறரிடம் பணம் பெற்றால் அவன் குற்றவாளியாவான்.

11. தமதல்ல என்று தெரிந்தும் அதனை எடுத்துக் கொள்வது இப்பிரிவின் கீழ் குற்றமாகும். உதாரணமாக வீதியில் கிடக்கும் ஒரு பொருளைக் கண்டு எடுப்பவருக்கு அப்பொருள் யாருடையது என தெரிய வேண்டிய தேவையில்லை. ஆனால் அது யாருடையது என்று தெரிவதற்கு அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் தெரிந்தவுடன் அவருக்கு மேற்படி பொருள் தன்வசம் இருக்கிறது எனத் தெரிவிக்க வேண்டும். அப்படி செய்யாமல் இருந்தால் குற்றமாகும். ஒருவன் பாதையில் யார் கொடுத்தாலும். பணம் வாங்கக்கூடிய Cash என எழுதப்பட்ட காசோலை ஒன்றை கண்டு எடுக்கிறான். அதைக் தொலைத்தவன் யார் என்று அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் அந்த காசோலையில் வங்கியின் பெயர் கணக்கு வைத்திருப்பவரின் வங்கிக் கணக்கு இலக்கம் என்பன இருக்கிறது. ஆகவே அவற்றைக் கொண்டு அந்தக்

காசோலை யாருடையது என அறியலாம். அப்படிக் கண்டு பிடிக்க முயற்சிக்காமல் அவன் அந்த காசோலையை தானே மாற்றிக் கொண்டால் அவன் மீது இந்தப் பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்படும்.

பல வர்த்தக நிலையங்களுக்கு காசோலைகள் கிடைக்கின்றன. பொருட்களை வாங்கும் போது வாங்குபவர்கள் மூன்றாம் நபரது காசோலையை கொடுத்துப் பொருட்களை கொள்வனவு செய்வது உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் தவறுதலாக வீதியில் கண்டு எடுத்த காசோலைகளையும் சேர்த்து வங்கியில் மாற்றி விடுவதும் உண்டு. இவர்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும். இக்காசோலைகளை பொறுத்தவரை இதில் சம்பந்தப்படுகின்ற பணம் தமக்கு கிடைக்க வேண்டியதில்லை என அறிவு இருந்தால் அவர் குற்றவாளியாகிறார்.

## மரணத்தின் பின்னர் கையாடல் செய்தல்

குடும்பத்தில் ஏற்படும் சில பிரச்சனைகளால் சிலர் தனிமையாக வேலைக்காரர்களின் உதவியுடன் அல்லது நண்பர்களின் மேற் பார்வையில் இறுதிக் காலத்தை கழிப்பதுண்டு. இவர்கள் மரணித்ததும் அவர்களுடன் இருப்பவர்கள் இறந்தவரின் சொத்து முறையாகவும் சட்டப்படியும் யாருக்கு சொந்தமாக வேண்டுமோ அவர்களுக்குச் செல்லாமல் தானே சுருட்டிக் கொள்வது குற்றமாகும். போலி உறுதிகள் அல்லது பத்திரங்களை தயாரித்து அவர் உயிருடன் இருக்கும் போது தமக்கு எழுதி விட்டார் என்று கூறுவதும் உண்டு.

இத்தகைய சந்தர்ப்பத்தில் அச் சொத்தை சொந்தம் எனப்பாராட்டுபவர் ஒருவர் இறக்கும் போது அவரது எழுது வினைஞராக அல்லது அவரால் தன்னைப் பராமரிக்க நியமிக்கப்பட்டவராக இருந்தால் அவருக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

இலங்கையில் இப்பிரிவின் கீழ் தீர்க்கப்பட்ட வழக்குகளை நான் படித்ததில்லை. ஆனால் இந்திய வழக்குகளான *கிர்தார் தாம்தாஸ்* என்ற பம்பாய் ஹைகோட் வழக்கும் *குல்ஜி எதிர் காஞ்சன்* என்ற மத்திய பிரதேச வழக்கும் டுட்கான் என்ற அகமதாபாத் ஹைகோட் வழக்கையும் நான் படித்ததுண்டு. இவற்றில் பம்பாய் ஹைக்கோட்டும் மத்திய பிரதேச ஹைக்கோட்டும் அளித்த தீர்ப்பின்படி இப்பிரிவின் கீழ் அசையும் ஆதனம் மட்டுமல்ல அசையா ஆதனமும் வருகிறது எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அகமதாபாத் உயர் நீதிமன்றம் அசையும் ஆதனம் மட்டும் வரும் என்கிறது.

எப்படியிருப்பினும் இந்த பிரிவு ஏற்படுத்தப்பட்டது சில விஷேட சொத்துக்களுக்கு மட்டுமே எனலாம். அத்துடன் சில விஷேட ஆட்களுக்கு மட்டுமே எனலாம். உதாரணமாக சேவையாளர் பாதுகாவல்காரர்களுக்கு மட்டுமே எனலாம்.

இப்பிரிவின்படி உரியவரின் சொத்து முறைப்படி அடைய வேண்டியவருக்கு அடைவதற்கு செல்லும் நேரத்திற்கு இடையில் எதுவும் சொத்து மாற்றம் நடைபெறுவதை தடைசெய்வதேயாகும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலே கூறியவையே கையாடல் என்ற குற்றத்திற்குள் வருகிறது.

ஆகவே இக்குற்றத்தை நிரூபிக்க பின்வரும் உப அங்கங்கள் இருக்க வேண்டும். 1(ஒன்று) தீய எண்ணத்துடன் ஒருவரின் பொருளை தனது சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொள்வது.

11(இரண்டு) அந்தப் பொருள் அசையும் பொருளாக இருக்க வேண்டும். இனி தண்டனைச் சட்டக் கோவையில் 389 ஆம் பிரிவான குற்றமுறையான நம்பிக்கைத்துரோகம் (Criminal Breach of Trust) என்ற பிரிவிற்குப் போகலாம்.

**தண்டனைச் சட்டக் கோவையின் 389 ஆம் பிரிவு.**

ஒருவரிடம் சொத்து ஒப்படைக்கப்படடிருக்கிறது. அல்லது அவருடைய நேரடி நிர்வாகத்தின் கீழ் ஒரு சொத்து வந்திருக்கிறது. அந்தச் சொத்தை அந்த ஆள் நேர்மையின்றி கையாடல் செய்வதும் (Dis Gonestly Misappropriates) தன்னுடைய சொந்த உபயோகத்துக்கென பயன்படுத்துவதும் அல்லது தன்னிடம் நம்பிக்கை வைத்து ஒப்படைக்கப்பட்ட சொத்தை சட்டப்படி எப்படி நிர்வகிக்க வேண்டுமோ அப்படி நிர்வகிக்காமல் நேர்மையின்றி அதனைப் பயன்படுத்துவதும் அல்லது விற்றுவிடுவதும் குற்றமாகும்.

சட்டப்படி அப்படி ஒப்படைக்கப்பட்ட சொத்தை பற்றி ஒப்பந்தம் ஏதாவது இருந்தால் அந்த ஒப்பந்தத்தை மீறி நடப்பதும் அப்படி மீறும்படி மற்றவர்களை அனுமதிப்பதும் குற்றமாகும். இந்த குற்றத்திற்கு குற்றமுறையான நம்பிக்கை துரோகம் என்கிறோம். இந்தியாவில் நம்பிக்கை மோசடி காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக பின்வரும் உதாரணங்களை காட்டலாம். முதலாளி ஒருவர் ETF என்ற தொழிலாளிகளிடம் இருந்து சம்பளத்தில் ஒரு பகுதியை கழித்து மத்திய வங்கிக்கு அனுப்ப வேண்டும் எனச் சட்டம் இருக்கிறது என வைத்துக் கொள்வோம். அவ்வாறு கழிக்கப்படுகின்ற பணம் அவரிடம் மத்திய வங்கிக்கு அனுப்புவதாக சட்டம் ஒப்படைத்திருக்கிறது. ஆனால் அந்த முதலாளி அதனை வங்கிக்கு அனுப்பாமல் இருந்தால் தேவைப்படும் பட்சத்தில் அவர் மீது இப்பிரிவின் கீழ் வழக்குத் தொடரலாம். ஏனெனில் சட்டத்தால் அவரிடம் அப்பணம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

அவருடைய நேரடி நிருவாகத்தின் கீழ் சொத்து இருக்கிறது. ஆனால் அவர் அதனை தன்னுடைய சொத்து உபயோகத்திற்கென பயன்படுத்தியிருந்தால் குற்றவாளி ஆகிறார்.

இன்னுமொரு உதாரணம் இறுதி விருப்பப்படி இறந்தவருடைய சொத்தை அவருடைய வாரிசுகளுக்கு பிரித்துக் கொடுக்க வேண்டும். ஆனால் அவர் பெற்ற அந்த சொத்தை அப்படி பிரித்துக் கொடுக்காமல் தம்முடைய சொந்த உபயோகத்திற்கு என்று வைத்துக் கொள்கிறார். அவர் நம்பிக்கை மோசம் செய்கிறார்.

இவ்விடத்தில் இன்னுமொரு விடயத்தையும் கூற வேண்டும். உயில் எழுதாமல் சிலர் இறப்பதுண்டு அத்தகைய சந்தர்ப்பத்தில் ஒருவர் மாவட்ட நீதிமன்றத்திற்குச் சென்று நிருவாகத் தத்துவப்பத்திரம் பெறலாம். பெரும்பாலும் கணவன் இறந்தால் மனைவிக்கே இப்பத்திரம் வழங்கப்படுகின்றது. சில வேளைகளில் வயது வந்த பிள்ளைகளுக்கும் வழங்கப்படுகின்றது. அவர்களது நிர்வாகப் பத்திரத்தில் நீதிமன்றத்தின் அனுமதியை பெற்றதன் பின்னர் சொத்து விற்கப்பட வேண்டும் என்று குறிக்கப்பட்டிருந்தாலும் சிலர் அப்படி அனுமதி பெறாமல் மற்றவர்களுக்கும் தெரியாமல் சொத்துக்களை விற்று விடுவதும் உண்டு.

இவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்தை சட்டப்படி நிருவகிக்காமல் மேலே கூறிய முறையில் விற்பனை செய்தால் அவர்களுக்கெதிராக மேற்படி பிரிவின் கீழ் வழக்குத்தாக்கல் செய்யலாம். வழக்கு நிரூபிக்கப்படும் பட்சத்தில் மூன்று ஆண்டு சிறைத்தண்டனையையும் தண்டப் பணமும் விதிக்கப்படும். சொத்தை வாங்கியவரும் குற்றவாளியாகிறார்.

இன்னுமொரு உதாரணம் ஒருவரிடம் ஒரு பொருளை ஓர் இடத்தில் இருந்து இன்னுமொரு இடத்திற்கு கொண்டு செல்லும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அவர் நேர்மையில்லாமல் அந்தப் பொருளை கையாடல் செய்து விடுகிறார். இவர் இப் பிரிவின் கீழ் குற்றம் செய்கின்றார்.

**வங்கிகள், அடகு பிடிப்போருக்கு இப்பிரிவின் கீழ் வழக்குத் தொடரலாமா?**

பலர் தமது நகைகளை வங்கியிலும் அடகு கடைகளிலும் ஈடு வைப்பதுண்டு. சில சந்தர்ப்பங்களில் வங்கிகளில் ஈடு வைத்த நகைகள் மாற்றப்பட்டதாக கூறி சிலர் வழக்குகள் நடத்துவதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்ததுண்டு.

இது இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் நடைபெறுவதுண்டு. *எம்.ஜி.மொசட் எதிர் சிவப்புத்தரப்பாவும் ஏனையோரும் (1984.CR.L.J)* என்ற வழக்கில் ஒருவர் இந்தியன் வங்கி ஒன்றில் ரூபா 1500க்கு தமது தங்க நகைகள் சிலவற்றை ஈடுவைத்ததாகவும் பின்னர் நகைகள் மீட்கச் சென்று பணத்தை செலுத்திய பின்னர் தான் ஈடு வைத்த நகைகள் தமக்குத் தரப்படாமல் வேறு நகைகள் தரப்பட்டதாகவும் கூறி வழக்கு வைத்தார்.

நீதிமன்றம் விசாரணையின் பின்னர் வங்கி முகாமையாளர் குற்றவாளி எனத் தீர்ப்பளித்தது. ஒரு வங்கிக் கிளையில் பலர் உத்தியோகத்தர்களாக இருப்பினும் சட்டப்படி வங்கி முகாமையாளரே வங்கிக் கிளையின் செயலை கட்டுப்படுத்தி ஆதிக்கம் செலுத்துவதால் மேற்படி நகைகளும் அவரது ஆதிக்கத்தின் கீழ் வருவதால் அவரே பொறுப்பு என்றது. உண்மையில் அவருக்கு அப்பொருளுக்கு என்ன நடந்தது என்பது தெரியாது இருக்கலாம்.

**பங்குடமை வியாபாரத்தில் உள்ள ஒருவருக்கு எதிராக இப் பிரிவின் கீழ் வழக்குத் தொடர்ந்து வெற்றி பெறலாமா?**

பங்குடமை வியாபாரம் என்பது ஒரே எண்ணத்தைக் கொண்ட சிலர் ஒன்று சேர்ந்து இலாபத்தை நோக்கமாகக் கொண்டு வியாபாரத்தை ஆரம்பிப்பதாகும். வியாபார பெயர் பதிவுச் சட்டத்தின் கீழ் இவை பதிவு செய்யப்பட்டாலும் அவ் வியாபார

நிலையம் சட்டத்தின் முன் ஒரு சட்டபூர்வமான ஆள் (Legal Person) ஆக கொள்ளப்படுவதில்லை. ஆனால் கம்பனிகள் செயற்கை ஆள் அல்லது சட்ட பூர்வமான ஆள் என்று சட்டம் கொள்கிறது. பங்குடமை வியாபாரத்தில் உள்ள சொத்துக்கள், வருமானங்கள், உரித்துக்கள், சுமைகள் எல்லாவற்றுக்கும் ஒவ்வொரு பங்காளரும் பொறுப்பாவார்.

ஒவ்வொருவரும் அதன் சொந்தக்காரர் ஆவார். ஆகவே அவர்களில் ஒருவர் பிழை செய்து விட்டார். நம்பிக்கை மோசடி செய்து விட்டார் என்று இன்னுமொரு பங்காளர் வழக்குத் தொடர முடியாது. மோசடி செய்து விட்டார் என்று கூறப்பட்டவருக்கும் சட்டப்படி அக்கடையில் உள்ள பணம் சொத்து என்பன சொந்தமானவை. ஆகவே சொந்தக்காரன் சொத்தை மோசடி செய்தார் என்று இன்னுமொரு சொந்தக்காரர் (பங்காளர்) முறைப்பாடு செய்ய முடியாது.

ஆயினும் பங்குடமை வியாபாரம் கலைக்கப்பட்டு கணக்குகள் முடிக்கப்பட்டு பங்குகள் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்ட பின்னர் ஒருவர் மோசடி செய்துள்ளார் என்று கண்டால் மேற்படி பிரிவின் கீழ் இல்லாமல் வேறு பிரிவின் கீழ் அவர்மீது வழக்குத் தொடரலாம்.

## எழுதுவினைஞர் அல்லது சேவையாளர் ஒருவரால் புரியப்படும் குற்ற முறையான நம்பிக்கை துரோகம்

வர்த்தக நிலையங்கள் பல தமது பொருட்களை விற்கும் போது வாடிக்கையாளரிடமிருந்து உடனடியாகப் பணத்தை பெறுவதில்லை.

பின்னரே அறவிடுகின்றனர். அவ்வாறு அறவிடும் போது தனது கடையில் பணிபுரியும் சேவையாளர்களை அனுப்பியே பணத்தை அறவிடுகின்றனர். பணத்தை பெறும் சேவையாளர் அப்பணத்தை முழுவதும் ஒப்புவிக்காமல் கணக்குகளை

பிழையாக காட்டி தான் வசூலித்த பணம் இவ்வளவு என்று பொய் கூறிவிட்டு மிகுதியை தான் வைத்துக் கொண்டால் பின்னர் அது பிடிபட்டால் அவருக்கு ஒரு வருட கால மறியலும் தண்டப்பணமும் விதிக்கப்படும்.

மேலே கூறிய இரண்டு பிரிவுகளிலும் உள்ள குற்றச்சாட்டுக்களை பார்க்கும் போது ஒன்று அசையும் ஆதனத்துடன் தொடர்பு உடையது என்றும் இன்னுமொன்று அசையா ஆதனத்துடன் தொடர்புடையதென்றும் கண்டு கொள்ளலாம். இதனாலேயே இப்பிரிவுகளின் கீழ் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் இரண்டு பிரிவுகளின் கீழேயும் ஒன்றுக்கு பதிலாக ஒன்று என்று தாக்கல் செய்யப்படுகின்றன. இதனை சட்டமாக வைத்து எதிராளிகள் தமக்கு விரோதமாக கூறிய குற்றச்சாட்டினை நிரூபிப்பதற்கு சாட்சியம் இல்லை என்று மார்தட்டிக் கொள்வதும் உண்டு.

ஆயினும் அவர்களுக்கு எதிராக மேற்படி பிரிவுகளை நிரூபிக்க சாட்சியம் இல்லா விட்டாலும் வழக்கு விசாரணையின் போது அளிக்கப்பட்ட சாட்சியங்களை கொண்டு வேறு பிரிவுகளின் கீழ் எதிராளிக்கு எதிராக வழக்கை திருத்தலாம் என நீதிமன்றம் கருதினால் வழக்கை திருத்தி எதிரிகளுக்கு தண்டனை விதிக்கலாம் என்பதை அவர்கள் உணர்வதில்லை. ஆகவே குற்றம் ஒன்றுக்கு ஆதார பூர்வமான சாட்சியங்கள் இருப்பின் நீதிமன்றம் குற்றப் பிரிவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தண்டனை விதிக்க வேண்டும் என்ற கட்டாயத்தை விட குற்றவாளியை தண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்தையே குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை எடுத்துக் காட்டுகிறது எனலாம்.

**எடுத்துக்காட்டு**

திருட்டுக்கு அல்லது களவாடப்பட்ட ஆதனத்தை பெறுதலுக்காக அல்லது குற்றமுறையான நம்பிக்கை துரோகமாக அல்லது ஏமாற்றுதலாக அமையக்கூடிய ஒரு செயலுக்காக ஒருவர் குற்றம் சாட்டப்படுகின்றார். அவர் ஒவ்வொரு குற்றத்துக்காகவும் அல்லது பலதை புரிந்துள்ளதாகவும் குற்றம் சாட்டப்படலாம். அவ்வாறு குற்றம் சாட்டப்படும் போது சாட்சியங்களில் இருந்து குற்றஞ்சாட்டப்பட்டு குற்றத்தில் இருந்து வேறு ஒரு தவறை புரிந்துள்ளார் எனச் சாட்சியங்களில் இருந்து தோன்றினால் அவர் மீது அத்தவறுக்காக குற்றம் சாட்டப்படவில்லையாயினும் அத்தவறுக்காக அவருக்கு குற்றத் தீர்ப்பு அளிக்கப்படலாம்.

குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவையின் 177 ஆம் பிரிவில் இது காணப்படுகிறது.

ஆகவே குற்றமுறையான கையாடல், குற்ற முறையான நம்பிக்கைத் துரோகம், ஏமாற்றுதல், திருட்டு என்பன இடம் பெறும் பட்சத்தில் தண்டனையில் இருந்து தப்ப முடியாது எனலாம். சாதாரண சாட்சியங்கள் மட்டுமே தேவை. அவற்றின் மூலம் வழக்கை நிரூபிக்கலாம்.

**xxxxxxxxxxxx**

## 04

## மணவாழ்வில் பிறந்த குழந்தையின் தந்தை யார் என்பதை தீர்மானிக்கும் அளவு கோல் என்னவென்று உங்களுக்கு தெரியுமா?

சாட்சியியல் சட்டத்தின் 112 ஆம் பிரிவு ஒரு குழந்தை மண வாழ்வில் பிறந்த முறைப்படியான குழந்தை தானா? என்பதை தீர்மானிக்கும் அனுமானத்தை எடுத்துக் கூறுகின்றது. அதன் கீழ் இரண்டு நிலைகளை அப்பிரிவு எடுத்துக் கூறுகின்றது.

I. முறையாக திருமணம் நடைபெற்ற தம்பதிகளுக்கு அவர்களுடைய திருமண வாழ்க்கையில் பிறந்த குழந்தை முறைப்படி பிறந்த குழந்தை என்பதும்,

II. தகுதியான நீதிமன்றமொன்றினால் திருமணம் இரத்துச் செய்யப்பட்டு மனைவி மீண்டும் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்து திருமணம் இரத்துச் செய்யப்பட்டு 280 நாட்களுக்குள் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தால் அக் குழந்தையின் தகப்பன் விவாகரத்துச் செய்யப்பட்ட அவளது கணவனேயாகும் என்றும் கூறுகின்றது.

ஆனால் மேலே காட்டிய இரண்டு நிலைகளையும் மறுதலிக்கலாம். அப்படி மறுதலிக்கும் பட்சத்தில் மேற்கண்ட அனுமானம் அல்லது ஊகம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஆயினும் சாட்சியங்கள் காட்டப்படும் பட்சத்தில் அதாவது கணவனும் மனைவியுமாக சேர்ந்து வாழ்ந்த சமயத்தில் குழந்தை கருத்தரிக்கும் காலம் இருந்தது என்று காட்டினால் அக்குழந்தை அவர்களுடைய மண வாழ்வில் பிறந்த சட்ட பூர்வமான குழந்தை என்றே சட்டம் கொள்ளும்.

சாட்சியல் சட்டத்தில் 112 ஆம் பிரிவு பொது நியதியின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட அனுமானம் அல்லது ஊகமாகும். ஏனெனில் தமது சமூக வாழ்க்கையில் சில கட்டுப்பாடுகளும் வழி காட்டல்களும் எமது முன்னோரால் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அவை நம் முன்னோர் அளித்த அருஞ்செல்வங்கள் என அழைக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் திருமண வாழ்வு. வாழும் பெண் ஒருவருக்கு பிறக்கும் குழந்தைகள் முறைப்படி கணவனுக்கே பிறந்த குழந்தைகளாக கருதப்பட வேண்டும் என்பதாகும். இல்லையேல் குழந்தைகள் பிற்காலத்தில் பல அவமானத்தை சந்திக்க வேண்டியிருக்குமென்பதனாலும் இந்நியதி புகுத்தப்பட்டுள்ளது எனலாம். இவ்வாறு நம் முன்னோர்கள் பல நியதிகளையும் கட்டுப்பாடுகளையும் சமூகத்தில் உட்புகுத்தி இருந்தாலும் சில சமயங்களில் இதற்கு மாறான சம்பவங்கள் நடைபெறுகின்றன என்பதையும் சமூகங்கள் மறக்கவில்லை என்பதை நாம் விவாகரத்து வழக்குகளில் காணலாம். 112 ஆம் பிரிவில் புற நடையிலும் காணலாம்.

**விவாகரத்து வழக்குக்கு சோரம் ஒரு காரணமாக அமைகிறது**

வாசகர்களுக்கு தெரியும் இலங்கையில் விவாகரத்து வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட வேண்டுமாயின் அதற்கு காட்டக்கூடிய காரணங்களில் ஒன்று சோரம் என்பதாகும். இதனைச் சட்டச் சொல்லில் வழக்கெழுகாரணம் என அழைப்பர்.

இனி சோரம் என்ற வழக்கெழுகாரணம் காட்டப்பட வேண்டுமானால் அதற்குத் தேவையதான நிகழ்வு என்னவெனில் மண வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒருவர் அது ஆண் ஆயினும் சரி பெண்ணாயினும் சரி தனது கணவர் அல்லது துணைவி அல்லாத இன்னுமொரு ஆளுடன் தன்னிச்சையாக பால் உறவில் ஈடுபட்டதாக காட்ட வேண்டும். அப்போது தான் நீதிமன்றம் அதனை ஏற்கும்.

சோரத்தினால் குழந்தை பிறந்தது என்று காட்டினால் அக்குழந்தை சட்ட பூர்வமான மண உறவினால் பிறக்கவில்லை என நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும். ஒரு குழந்தை சோரத்தினால் பிறந்தது என்பதை நிரூபிப்பது மிகக் கஷ்டம். தற்கால உலகில் வைத்தியத் துறை அடைந்திருக்கின்ற முன்னேற்றத்தினால் DNA பரீட்சையின் மூலம் அக் குழந்தை முறைப்படியான கணவனது குழந்தையல்ல என்பதை நிபுணத்துவம் சாட்சியம் மூலம் காட்ட முடியுமாயினும் அது எல்லா நிலையிலும் சாத்தியம் இல்லை. ஏனெனில் சோரம் என்பது இரகசியமாக நடைபெறும் ஒரு நிகழ்வு ஆகும். ஆகவே சாட்சியங்கள் எடுப்பது கஷ்டம்.

இவ்விடத்தில் நாம் கூறுவது விவாகரத்துக்கான சோரத்தைப் பற்றியேயாகும். இனி நாம் முறைப்படி குழந்தை பிறந்ததா? என்ற பிரிவை ஆராய்வோம். விவாகரத்துக்கு காரணமாக சோரத்தையும் பற்றியேயாகும். இனி நாம் முறைப்படி குழந்தை பிறந்ததா? என்ற பிரிவை ஆராய்வோம். விவாகரத்துக்கு காரணமான சோரத்தையும் முறைப்படி பிறந்த குழந்தையா? என்கின்ற போது ஆராய்கின்ற நிகழ்வையும் ஒன்றுடன் ஒன்று குழப்பாமல் ஆராய வேண்டும்.

**112 ஆம் பிரிவின் கீழ் பிறந்த குழந்தை சோரத்தினால் பிறக்கவில்லை என்பது,** ஒரு குழந்தை பிறந்தால் மேற்படி பிரிவின் கீழ் அது சட்ட பூர்வமான கணவனுடையதாகவே நீதிமன்றங்கள் பெரும்பாலும் கொள்ளும். அதனை மறுதலிக்கும் உரிமை கணவனுக்குண்டு. அவரே அதனை நிருபிக்க வேண்டும். இதனை தீர்க்கப்பட்ட வழக்குகளை படித்தால் தெளிவாக விளங்கும்.

**இலங்கை வழக்குகள்**

*பொசோனா எதிர் பொபஞ்சிபாஸ்* என்ற வழக்கு இது இலங்கை வழக்காகும். இந்த வழக்கை கணவன் தாக்கல் செய்து

இருந்தார். மனைவி தான் அறியாத ஒரு ஆடவனுடன் சோரம் போனதாகவும் தன்னை விட்டு வன்மஉறவு அறுத்தலின் கீழ் பிரிந்துள்ளதாகவும் கூறி விவாகரத்து வழக்கை கணவன் தாக்கல் செய்திருந்தான். வழக்கை தாக்கல் செய்ததும் கணவன் அவளது வீட்டினின்றும் வெளியேறி வேறு ஒரு இடத்தில் வசித்து வந்தான். அவ்வாறு அவன் வசித்து வந்த வீடு மனைவியின் வீட்டிற்குகிட்டவே இருந்தது.

வழக்கின் போது மனைவி சாட்சியம் கூறுகையில் தாங்கள் பிரிந்தது உண்மையே. ஆயினும் தனது கணவர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மனேஜராக கடமை புரியும் கூட்டுறவுக் கடைக்கு நான் பங்கீட்டுப் பொருட்களை வாங்கச்செல்வதையும் அதன் போது கணவன் தன்னுடைன் ஒற்றுமையாகியதாகவும் தான் கூட்டுறவுச் கடைக்கு செல்லும் போது கணவன் தன்னை ஸ்ரோருக்குள் வரச்சொல்வதாகவும் ஸ்ரோருக்குள் தாங்கள் உடல் உறவு வைப்பதாகவும் கூறியதுடன் தனது வயிற்றில் உள்ள குழந்தை தனது கணவனுடையதே என்றும் கூறினாள். அதே நேரம் அவளது கணவன் கூறியது என்னவெனில் மனைவி கூறியது அனைத்தும் பொய் எனவும் மனைவி தனது வீட்டிற்கு வந்த போது தான் அத்துமீறல் வழக்கை மனைவி மீது தாக்கல் செய்ததாகவும் நீதிமன்றத்தால் அவள் எச்சரிக்கப்பட்டு தனது வீட்டிற்கு வருவதை தடை செய்ததாகவும் கூறியதுடன் கூட்டுறவு கடையில் பலர் வேலை செய்யும் போது தான் அவளுடன் உடலுறவு கொள்ள அவகாசம் இல்லையென்றும் கூறினான். வேறு சாட்சிகள் அழைக்கப்படவில்லை. இருவரின் சாட்சியத்தைக் கொண்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. எப்போதும் சட்ட ஊகமே மேலோங்கி நிற்கும் என்றும் இதனால் குழந்தை தந்தையினதும் இல்லை என்பதற்கு தேவையான கரு உயிர் பெறும் தினத்தில் (Conception) கணவன் மனைவியிடையே பிரத்தியேக சேர்வுக்கு (Personel Access) இடம் இல்லாமல் இருந்தது என்பது நிரூபிக்கப்பட வேண்டுமென்றும் அந்நிகழ்வு

கணவனால் நிரூபிக்கப்படவில்லை என்றும் கூறி பிறந்த குழந்தைக்கு விவாகரத்தை தாக்கல் செய்துள்ளவரே தகப்பன் என்றும் தீர்ந்தது.

இன்னுமொரு வழக்கான *பொன்சேகா எதிர் பெரேரா* என்ற வழக்கில் கணவணும் மனைவியும் ஊர் விதானையாரிடம் சென்று தாங்கள் பிரிந்து வாழப்போவதாக கூறி வாழத்தொடங்கினர். பின்னர் பெண் கர்ப்பவதியானாள். கணவன் வழக்கைத் தாக்கல் செய்தான். பெண்ணினது சாட்சியத்தில் முரண்பாடு இருந்தபோது நீதிமன்றம் கூறியது என்னவெனில் சூழலைக் கருத்தில் கொண்டு குழந்தையின் தகப்பன் யார்? என்று தீர்மானிக்க சட்டம் இடம் கொடுக்கவில்லை என்றும் கணவனுக்கு கரு உயிர் பெறும் தினத்தில் (Conception) மனைவியுடன் பிரத்தியேக சேர்வுக்கு (No Access ) இடமில்லாமல் இருந்தது என்பது நிரூபிக்கப்பட வேண்டும் என்று கூறியது.

இன்னுமொரு இலங்கை வழக்கு தீர்ப்பு பிரிவுக் கவுன்சிலால் வழங்கப்பட்டது. ஆகவே இது முக்கியமான வழக்குமட்டுமல்ல கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வழக்காகவும் இருப்பதால் பலரும் தெரிந்து கொள்ளவும் விரும்புவர். இந்த வழக்கில் பெண் ஒருத்தி ‘J’ என்பவரை மணந்து 9 வருடகாலம் சீவித்தாள். பின்னர் ‘J’ க்கு அலுப்புத்தட்டி அந்தப் பெண்ணை விட்டுவிட்டு சற்றுத் தொலைவில் உள்ள இடத்துக்கு சென்று இன்னுமொரு பெண்ணை ‘J’ மணந்தார். அவர்கள் வாழ்ந்த இடம் கல்லாறு என அழைக்கப்படும் இடத்திற்கு அருகில் உள்ள ‘அன்னாமலை’ என்ற ஊரில் ஆகும். இது கல்லாற்றில் இருந்து மூன்று அல்லது நான்கு மைல் தூரத்தில் உள்ளது. கல்லாற்றில் முதல் மனைவி வாழ்ந்தாள். ‘J’ க்கு மூன்று குழந்தைகள் அன்னாமலையில் வாழும் 2 ஆம் மனைவிக்கு கிடைத்தது.

ஆகஸ்ட் 1949 இல் கல்லாற்றில் வாழும் ‘J’ யினது சட்டப்படியான 2ஆவது மனைவி அவள் வாழ்ந்து வரும் வீட்டில் உள்ள குடும்பத்தலைவனால் ஒரு குழந்தைக்கு தாய் ஆக்கப்பட்டாள். குடும்பத்தலைவனும் தலைவியும் அவர்களுடைய ஒரு பெண் பிள்ளையும் அங்கே வாழ்ந்து வந்தனர். ஆயினும் குடும்பத்தலைவன் ‘J’யினது மனைவிக்கும் ஒரு குழந்தையை உருவாக்கினான். அந்த குழந்தை 24 மே 1950 இல் பிறந்தது. இந்த குழந்தையினதும் தகப்பன் யார்? என்ற பிரச்சினை எழுந்தபோது பிரபுக்கள் சபை கூறியது என்னவெனில் அதனை தீர்ப்பதற்கு ‘J’க்கும் பிரிந்திருக்கும் மனைவிக்கும் பிரத்தியேகத் தொடர்புக்கு இடமில்லாமல் இருந்தது என்ற நிரூபனம் அவசியம் என்றது. இவ்வாறு நீதிமன்றங்கள் சட்ட ஊகத்தை இலகுவில் மாற்ற பின்நின்றன. இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் இதே நிலைதான் என்பதை பின்வரும் வழக்குகளில் காணலாம்.

## 112 ஆம் பிரிவின் கீழ் இந்தியன் வழக்குகள்

ராம் கோவிந்த என்ற வழக்கில் கணவன் இறந்து 280 நாட்களுக்குள் குழந்தை பிறந்தது அக்குழந்தைக்கான கரு உயிர்கொள்ளும் தினத்திலும் அதன் பின்னரும் கணவனது உடலில் பருக்களும் கொப்புளங்களும் இருந்தது. இதனால் இவன் 14 நாட்களில் இறந்துவிட்டான். இக் குழந்தைக்கு தகப்பன் இறந்தவன் அல்ல என்று கூறி வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதுடன் சாட்சியங்களும் முன்வைக்கப்பட்டன. பிரபுக்கள் சபை இக்கோரிக்கையை நிராகரித்து அக்குழந்தை இறந்த கணவனினது என்றே தீர்மானித்தது. இதற்கு பிரிவுக் கவுன்சில் கூறிய காரணம் என்னவெனில் குழந்தைக்கான கரு உயிர் பெற்ற காலத்தில் இருந்து 14 நாட்கள் வரை கணவன் மனைவியுடன் வாழ்ந்து வந்தபோது அவர்களுக்கிடையே பிரத்தியேக சேர்வு இல்லை எனக்காட்ட அவனது உடலில் சில பகுதிகளில் இருந்த கொப்புளங்கள் போதாது என்றும் எனவே

கணவன் மனைவியுடன் உடலுறவு வைக்கவில்லை என்பதற்கு சாட்சியங்கள் இல்லை என்றும் கூறி இக்குழந்தை அக்கணவரின் திருமணப் பிறப்பு குழந்தையே என்று பிரபுக்கள் சபை தீர்மானித்தது.

தமிழ் நாட்டு வழக்கான சேது வழக்கின் நிகழ்வுகள் புதுமையானவை ஆனாலும் நீதிமன்றம் சட்ட ஊகத்தை மாற்றவில்லை. வழக்கின் நிகழ்வுகள் பின்வருமாறு:-

ஒரு பெண் அக்டோபர் 1903 இல் ‘y’ என்பவரை மணந்தாள். பின்னர் அவரை 1904 ஜூனில் விவாகரத்து செய்துவிட்டு 1904 ஜூலை இல் T என்பவரை இரண்டாவது கணவராக அப் பெண் மணந்தாள். அவள் 1904 இல் செப்டம்பர் மாதம் அதாவது இரண்டாவது திருமணம் செய்து இரண்டு மாதங்களுக்கிடையில் ஒரு குழந்தையை பெற்று எடுத்தாள். வாசகர்கள் இவ்விடத்தில் மிகக்கவனமாக அவதானிக்க வேண்டியது குழந்தை கரு கொள்ளும் நிலையில் அந்தப் பெண் வாழ்ந்தது முதலாவது கணவனுடனாகும்.

குழந்தை பிறந்தது இரண்டாவது கணவனுடன் வாழும் போது ஆகும். ஆகவே இந்த குழந்தைக்கு தகப்பன் யார் என்ற பிரச்சினை எழுந்தபோது நீதிமன்றம் என்ன தீர்ப்பை வழங்கியது என்பதையே கவனிக்கவேண்டும்.

நீதிமன்றம் இக்குழந்தையின் தகப்பன் இரண்டாவது கணவனேயாகும் என்றது. நீதிபதி தேவதாஸ் அவர்கள் இத்தீர்ப்பை நடைமுறையில் உள்ள சூழலுடன் ஆராய்ந்து பார்த்து தீர்ப்பு வழங்கியுள்ளார் என்பதை அவரது தீர்ப்பில் இருந்து கண்டு கொள்ளலாம் அவர் தனது தீர்ப்பில் கூறியதாவது:-

ஒரு பெண் கர்ப்பவதியாக இருந்தாள் என அறிந்த கொண்டு அவளை திருமணம் செய்து கொண்டு உடனே குழந்தையும்

பிறந்து விட்டால் அது அவனது திருமணப் பிறப்பு குழந்தையாகவே கருதவேண்டும். ஆனால் ஒரு பெண் கருவுற்றிருக்கின்றாள் என்பதை அறியாமல் அவளை திருமணம் செய்து கொண்டிருந்து குழந்தையும் பிறந்து விட்டால் குழந்தை கருவுற்றிருந்த காலத்தில் தனக்கும் அப்பெண்ணுக்கும் உடலுறவு ஏதும் ஏற்படவில்லை என்பதை தக்க ஆதாரங்களுடன் காட்டினால் 112 ஆம் பிரிவை மறுதலிப்பது ஏற்றுக் கொள்ளப்படும்.

அப்படியில்லையெனில் திருமணமாகி ஓரிரு நாட்களோ ஓரிரு மணித்தியாலங்களுக்குள்ளே குழந்தை பிறந்தால் அவர்களது திருமணப்பிறப்பு குழந்தையாகவே கருதப்படும் என்றார்.

மேலே காட்டிய வழக்குகளில் இருந்து வாசகர்கள் அறிய வேண்டியது என்னவெனில் சாட்சியல் சட்டத்தின் 112 ஆம் பிரிவின் கீழ் எழுகின்ற ஊகத்தை இலகுவில் மறுதலிக்க முடியாது என்பதாகும்.

ஆயினும் நவீன வைத்தியமுறைகளை சாட்சியாகக் கொண்டு தனக்கும் மனைவிக்குமிடையே பிரத்தியேக இணைவு இல்லை என்பதை நிரூபிக்கலாம். வைத்திய சாட்சியங்களின்படி ஒரு குழந்தை கருவாகி பொதுவாக 266 நாட்களுக்குள் (38 கிழமைக்குள்) நிறை மாதக்குழந்தையாக மாற இடமண்டு. சில சந்தர்ப்பங்களில் 280 நாட்கள் நிறைமாதக் குழந்தையாக மாற தேவைப்படலாம். பிரபுக்கள் சபை *ஸ்கில் எதிர் ஸ்கில்* என்ற வழக்கில் 331 நாட்களில் குழந்தை ஒன்று பிறக்க சாத்தியமில்லை என்பதை ஏற்க மறுத்தது. இவற்றைவிட கூடுதலான நாட்களில் பிறக்கும் குழந்தையானது தகப்பன் மனைவிக்கு கருத்தரிக்கும் நாட்களில் தனக்கு பிரத்தியேக சேர்வுக்கு இடம் இருக்கவில்லை என்று நிரூபித்தால் அவர் தான் அக்குழந்தையின் தகப்பன் இல்லை என்பதை நிரூபிக்கலாம் என்று இந்திய நீதிமன்றம் பின்வரும் வழக்கில் ஏற்றுக்கொண்டது. சாவித்திரிதேவி வழக்கில் கணவன்

மனைவியை விட்டுப் பிரிந்து மூன்று வருடங்கள் கழித்து விவாகரத்து ஏற்படுகின்றது மனைவி தனியாக கிராமத்தில் அவளது விட்டில் வசித்து வந்தபோது, அவளுக்கு ஒரு குழந்தை பிறக்கின்றது. இக்குழந்தை விவாகரத்து பெற்ற கணவரின் குழந்தையல்ல என தீர்ப்பு வழங்கப்பட்டது.

தற்போது வைத்திய பரிசோதனை மூலம் குழந்தையின் தகப்பனார் யார் என்பது தீர்மானிக்கப்படுகின்றது. இதனை தென்னாபிரிக்க நாடுகள் வரவேற்பதில்லை. ஏனெனில் பச்சை பாலக குழந்தையின் இரத்தத்தை எடுப்பதை அவை விரும்புவதில்லை. இது பிற்போக்கான ஒரு நிலையாயினும் அவற்றை சிறுமையாக அந்நாட்டு நீதிமன்றங்கள் கருதுவதில்லை ஏனைய நாடுகள் DNA பரிசோதனையை வரவேற்று உண்மை நிலையை கண்டறிய முயலுகின்றன.

ஆங்கில நாடு (UK) இந்த குழந்தையை வரவேற்கின்றது. உண்மையான தகப்பன் யார் என்பதை இரத்தப்பரிசோதனை மூலம் கண்டு பிடிப்பதால் சகலருக்கும் நன்மை ஏற்படுகிறதே தவிர தீமை இல்லை. சந்தேகத்துடன் வாழ்க்கை நடத்த தேவையில்லை என்பதை அந்நாட்டின் கொள்கையாக இருக்கிறது. டெனிவ் பிரபு அவர்கள் இதனை வரவேற்றுப் பின்வருமாறு கூறுகின்றார். விஞ்ஞானமானது அதன் உச்ச நிலையை அடைந்து வருகிறது. ஒரு விடயத்தை துல்லியமாக காட்டுகிறது. ஒருவன் அக்குழந்தையின் தகப்பன்தான் என்றோ தகப்பன் இல்லை என்றோ இரத்தப் பரிசோதனை மூலம் நூற்றுக்கு 70% மேல் உண்மையாக கண்டறியலாம். ஆகவே அத்தகைய சாட்சியத்தை ஒதுக்கி விட்டு உண்மையைக் கண்டறிய முற்படுவது யதார்த்தம் இல்லை என்றார்.

ஆயினும் இதற்கு ஆதரவாக இருப்பவர்களைப் போல் எதிர்ப்பானவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இரத்தப் பரிசோதனைக்கு பின்வரும் காரணங்களை காட்டி எதிர்க்கின்றார்கள்.

பாலகனின் தோலை துளைக்க வேண்டியிருப்பது (Puncturing of the skin)

இரத்தப்பரிசோதனைக்கு இடம் கொடுப்பது நீதிபதியின் விருப்பத்தை பொறுத்தது. சகல நீதிபதிகளும் இதனை பின்பற்ற மறுப்பது இரத்தப்பரிசோதனை ஒரு செயற்கை முறையாக தகப்பனை தெரிவு செய்யவதில்லை எனினும் நீதிமன்றங்கள் அப்பரிசோதனையின் குறைபாடுகளை கருத்தில் கொண்டு அவ்வறிக்கையை ஏற்கமறுக்கும் பட்சத்தில் உண்மையை கண்டு அறிய முடியாமல் போகிறது. எடுத்துக்காட்டாக சுப்பிரமணியம் என்ற கேரள மாநில வழக்கில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்ட கணவனின் விந்துகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு அதில் உயிர் அனுக்கள் இல்லை என அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. ஆயினும் சாட்சியங்களின் படி விந்து பரிசோதனை சரியான முறையில் செய்யப்படவில்லை என்று நீதிமன்றம் கூறி கருத்தடை செய்து கொண்டவனே தகப்பன் என்றது.

இவ்வாறு இரத்தப் பரிசோதனை சாட்சியியல் சட்டத்தின் 112 ஆம் பிரிவில் கூறப்பட்ட ஊகத்தை மறுதலிக்க உதவாததால் அதனை எதிர்க்கின்றனர்.

இன்னுமொரு முக்கியமான விடயம் உண்டு. அதாவது பராமரிப்பு வழக்குகளில் பராமரிப்பு பணம் கோரி வழக்கைத் தாக்கல் செய்யும் ஒரு பெண் தனது கணவர் அல்லாத தன்னுடன் தொடர்பு வைத்திருக்கும் ஒரு நபரிடம் இருந்து பராமரிப்பு பணத்தைப் பெற இந்த 11ஐ ஆம் பிரிவு தடையாகின்றதா? என்பதேயாகும்.

கணவனும் மனைவியும் விவாகரத்துப் பெறாமல் பல வருடகாலம் வாழ்கின்றார்கள் வெளிநாட்டில் வாழும் சிலர் பலவருடகாலம் தமது சொந்த நாட்டிற்கு வருவதில்லை. அத்தகைய சந்தர்ப்பத்திலும் இங்குள்ள துணைவர்கள் தமக்கு

துணையாக இன்னுமொருவரை வைத்துக் கொள்ளவது ஓரளவு சகஜமாகிவிட்டது. அத்தகைய சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு குழந்தை கிடைத்தால் அந்தப் பெண் பராமரிப்பு பணம் பெறலாமா? என்பதே வினாவாகும்.

ஆனால் சட்டப்படி கணவன் ஒருவன் இருக்கும்போது இன்னொருவரிடமிருந்து சீவனாமசம் பெறுவது சரியா? என்ற கேள்வி எழுகிறது. இந்த வினாவை பலர் எழுப்புவது இல்லை எழுப்பினால் சீவனாம்சம் கட்டவேண்டிய நிலையில் இருந்து அவர் விடுபடவேண்டும்.

## முடிவுரை

மேற்கண்ட பிரிவு 112 ஐயும் தீர்க்கப்பட்ட வழக்குகளையும் பார்க்கும்போது ஒருவர் தனது குழந்தையில்லை என்று கூறி 112ஆம் பிரிவினால் எழும் ஊகத்தை மறுதலிக்க வேண்டுமானால் பின்வரும் வழிகளிலேயே அதனை நிரூபிக்கலாம்.

I. கணவன் தனது மனைவிக்கு குழந்தை தரிக்கும் காலத்தில் இருந்து தொடர்ந்து பல வருடகாலம் சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து கொண்டிருப்பது,

II. வெளிநாட்டில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பது,

III. கணவன் மனைவியுடன் வாழும் பொது ஆண்மையற்றவனாக இருந்தது.

மேலேயுள்ளவற்றில் ஒன்றை அல்லது பலவற்றை நிரூபிக்கும் பொழுது கணவன் மேற்படி ஊகத்தை மறுதலித்து நிரூபிக்கலாம். குழந்தை தனது இல்லை என்று கூறலாம்.

இல்லையேல் அவரால் நிரூபிப்பது அவரது அதிஷ்டத்தை பொறுத்தது.

இன்னுனொரு முக்கிய விடயத்தையும் வாசகர்கள் மனதில் கொள்ளவேண்டும். ஒரு ஆணும் பெண்ணும் ஒருமித்து வாழ்வதற்கு பலகாரணங்கள் உண்டு.

i. வழுவான திருமண பந்தம்,
ii. சம்பிரதாயமான கணவன் மனைவியாக வாழ்தல் மற்றும்,
iii. துணைக்கு ஒருவரை துணையாக எடுத்து வாழ்தல்.

இதில் எப்படி வாழ்ந்தாலும் சமூகம் அவர்களை கணவன் மனைவியாக ஏற்றுக் கொண்டால் அங்கு சமயச் சடங்குகளோ வேறு ஆவண ஒப்பந்தங்களோ இல்லாவிட்டாலும் அவர்கள் இருவரிடையே உடல் உறவு இருந்தது என்றும் அதன் பலனாக குழந்தைகள் கிடைத்தன என்பதையும் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென Inre tayler என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டது.

ஆகவே குழந்தையின் தகப்பன் யார் என்ற வினா எழும்போது கட்டாயமாக பதிவுத் திருமணம் அவசியமில்லை எனவும் வாதிக்கலாம்.

ஆகவே மேற்படி ஊகம் ஒருவரது ஒப்புவிக்கும் பொறுப்பு சுமையை குறைக்கிறது எனவும் இன்னுமொருவரின் பொறுப்புச் சுமையை கூட்டுகிறது எனவும் கூறலாம்.

**xxxxxxxxxxx**

## 05

## வீதி விபத்திற்கு வாகன சாரதிகள் மட்டுமல்ல பாதசாரதிகளும் பொறுப்புக் கூற வேண்டும்.

நமது நாளாந்த வாழ்வில் நேரடியாகவும் ஊடகங்கள் மூலமாகவும் மற்றும் தகவல் தரும் சாதனங்கள் மூலமாகவும் வீதிகளில் ஏற்படும் வாகன விபத்துக்களை அறிகிறோம். பலர் இறப்பதும் பலரது அவயவங்கள் சேதம் அடைவதையும் பார்க்கின்றோம். இவற்றுக்குக் காரணம் விபத்துக்குள்ளான வாகனத்தின் சாரதியையே திட்டுகிறோம். ஆயினும் சட்டமானது சாரதி மீது பரிபூரண குற்றப் பொறுப்பை எல்லாச் சந்தர்ப்பத்திலும் சுமத்துவது இல்லையென்றும் பாதசாரிகளின் உடன் கவனமின்மையும் காரணமாக அமைகிறதா? என ஆராய்கிறது என்பதையும் பலர் அறிவதில்லை. சாதாரணமாக பெருந்தெருக்களில் வரையப்பட்டிருக்கும் மஞ்சள் கோட்டிற்குள்ளாக வாகனங்களை செலுத்தும் போது சாரதி மிகக் கவனமாக வாகனத்தைச் செலுத்த வேண்டும் என்று போக்குவரத்துச் சட்டம் எதிர்பார்ப்பதைப் போல் பாதசாரிகளின் சரணாலயமான மேற்படி மஞ்சள் கோட்டிற்குள்ளாகவே பாதசாரிகளும் கடக்கவேண்டுமென்றும் அதனைவிடுத்து மஞ்சள் கோட்டிற்கு வெளியே பாதையை கடக்கக் கூடாது என்பதையும் சட்டம் எதிர்பார்க்கிறது என்பதையும் பலர் அறிவதில்லை.

இதனை மக்களுக்கு அறிவுறுத்தவே தற்போது பல பாதசாரிகள் மஞ்சள் கோட்டிற்குப் புறம்பாக வீதியை கடந்தால் தண்டணையாக அபராதத் தொகையை விதித்து நீதிமன்றத்தில் செலுத்துமாறு கேட்கின்றனர். இதன்மூலம் பாதசாரிகள் சில ஒழுங்குகளை கடைப்பிடிக்க வேண்டும் என்ற அறிவை பெறுகின்றனர் என்று நிச்சயமாகக் கூறலாம்.

மஞ்சள் கோட்டிற்குள்ளாக வீதியைக் கடக்க எமக்கு உரிமையுள்ளது என்ற இறுமாப்பில் சிலர் கோட்டிற்குள்ளால்

வாகனம் வரும்போதும் கடப்பதை நாம் பல இடங்களில் அவதானித்துள்ளோம். இவர்கள் ஒன்றை மட்டும் மறந்து விடுகிறார்கள். அதாவது சட்டம் எம்மை காப்பாற்றும் என்பதைவிட எமது உயிரை நாமே காப்பாற்ற வேண்டும் என்பதை அவர்கள் மறந்துவிட்டு விபத்துத்திற்குள்ளாகிறார்கள். ஆகவே சகலரும் பாதையைக் கடக்கும் போது சட்டப் பாதுகாப்பை விட சுய பாதுகாப்பை மனதில் கொண்டு நடக்க வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே இன்று நாம் வாகன விபத்துக்கள் சம்பந்தமாக சட்டங்கள் கூறுகின்ற விபரத்தையும் பாதசாரிகளின் உடன் கவனமின்மையையும் அப்படி விபத்து நடைபெற்றால் அதற்குரிய இழப்பீடுகள் என்ன எப்படிப் பெறலாம் என்பதையும் பார்க்கப் போகிறோம்.

மஞ்சள் கோட்டுக்குள்ளால் நடக்கும் போது கையடக்கத் தொலைபேசியில் தொடர்பு கொள்வதை தவிர்க்க வேண்டும்.

**முதலில் கவனமின்மை என்றால் என்ன என பார்க்க வேண்டும்**

கவனமின்மை என்பது சாதாரண உலக வழக்கில் செய்யவேண்டியதை செய்யாமல் விடுவதைக் குறிக்கும். உதாரணமாக குழந்தைகளை கவனமாக பார்க்க வேண்டும் என்று கூறும்போது அவர்களுக்கு செய்யவேண்டியதை அல்லது கூற வேண்டியதை செய்யாமல் விட்டால் அவர்கள் நீ குழந்தையை கவனமில்லாமல் பார்த்ததால்தான் இது நடந்தது என்கின்றனர். தமிழ் நாட்டில் உத்தம பாளையும் என்ற ஊர் ஒன்று உண்டு.

அங்கு வளர்ந்த சிறுவன் ஒருவன் அயல் வீடுகளில் சில பொருட்களை திருடி வந்தான். தாய் தகப்பன் அதனை கண்டுபிடிக்கவில்லை. இவன் 13 வயதாக இருக்கும் போது 4 வயதுச் சிறுமியை பலாத்காரம் செய்து கொடூரமாகக் கொலை செய்ததுடன் பெற்றோருக்கும் விஷம் கொடுத்து கொலை

செய்ய முயற்சித்தான் என பொலிஸ் விசாரணையில் தெரிய வந்தது.

பின்னர் அவ்வூர் மக்கள் அவனது பெற்றொரை பார்த்து நீங்கள் கவனமில்லாமல் அவனை வளர்த்ததால் தான் இந்நிலை வந்தது என்று திட்டினார்கள். இங்கு கவனமின்மை என்பது செய்யவேண்டியதை செய்யாமல் இருப்பதை காணலாம். இவ்வாறு பரந்த பொருளில் கவனமின்மை என்பது உலக வழக்கில் வழங்கப்படுகிறது.

ஆனால் மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் கவனமின்மை என்பது சட்டத்தால் பிணைக்கப்பட்ட கடமையினின்று தவறுதலைக் குறிக்கிறது எனலாலம். “A breach of a duty to takecare Imposed by law எனலாம். ஆகவே மேற்படி போக்குவரத்துச் சட்டத்தில் கவனமின்மை என்பது சட்டத்தால் பிணைக்கப்பட்ட கடமையின் நின்றும் தவறுதல் என ஒருவாறு கூறலாம்.

இதனால் தான் மோட்டார் வாகனம் ஒன்று வீதியில் விபத்திற்குள்ளானால் அதற்கு காரணமானவர்கள் மீது பொலிஸார் வழக்குத் தொடுக்கின்றனர். சட்டத்தை மீறினார்கள் என்றே வழக்கு தொடுக்கப்படுகிறது. பொலிஸார் வழக்கத் தொடுக்கும்போது எதனைக் கவனிப்பர் என அறிந்துகொள்ளவேண்டும். ஒரு மோட்டார் வண்டியை செலுத்துகின்ற சாரதியின் செயற்பாடானது அவரது கவனமின்மை மீது மோதினால் கவனமின்மையாக செலுத்திய சாரதி மீது வழக்குத் தொடுப்பர். சாட்சியங்களை அடிப்படையாக வைத்து பொலிஸார் இதனைத் தீர்மானிப்பர். மஞ்சள் கோட்டிற்குள்ளால் ஒருவர் நடக்கும் போது வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று சட்டம் கடப்பாடு விதிக்கிறதே தவிர வாகனம் வருகிறது என்று மக்கள் அதனைக் கடக்காமல் இருக்க வேண்டும் என்று சட்டம் எதிர்பார்க்கவில்லை. இதனாலேயே பொலிஸார் விபத்து

ஏற்படாமல் இருந்த போதும் ஆட்களும் வாகனமும் மஞ்சள் கோட்டுக்குள் இருந்தால் வாகனச் சாரதி மீது வழக்குத் தாக்கல் செய்கின்றனர்.

சட்டத்தால் சாரதிகள் அவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே மோட்டர் வாகன போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் சாரதிகள் மீது கவனமின்மை என்னும் கடப்பாடு சட்டத்தால் சுமத்தப்பட்டுள்ளது என்பதை ஒவ்வொரு சாரதியும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

**கவனமின்மையால் ஏற்படும் வீதி விபத்துக்களும் சட்ட நிவாரணங்களும் சில**

கவனமின்மையால் ஏற்படும் வீதி விபத்துக்களில் சகலவற்றையும் இச்சிறு கட்டுரையில் உள்ளடக்க முடியாது. ஆயினும் முக்கியமான சிலவற்றை கூறலாம்.

அவையாவன:-

1. வாகன விபத்தால் சொத்துக்களுக்கு ஏற்படும் நஷ்டம்.
2. மரணம் அல்லது அவயங்கள் பாதிப்பு இதற்கு இழப்பு.
3. அரச சொத்துக்களுக்கு ஏற்படும் நட்டம். உதாரணம் மேம்பாலங்கள், வீதியில் உள்ள மின்சாரக் கம்பங்கள் மற்றும் அதையொத்தவை என்பன முக்கியமானவை ஆகின்றன.

இனி வாகன விபத்தால் சொத்துக்களுக்கு ஏற்படும் நஷ்டங்கள் என்ன எனப் பார்ப்போம். விபத்தில் சிக்கியுள்ளது இரண்டு வாகனங்கள். ஆனால் விபத்தை உண்டாக்கிய வாகனத்தால் மற்றைய வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தையும், அந்த வாகனத்திற்குள் பிரயாணம் செய்த பிரயாணிகளுக்கு உடலில் ஏற்பட்ட காயங்களுக்கான இழப்பீட்டையும், அக்காயங்களின் காரணமாக அவர்களது வருமானத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களையும், விபத்தை உண்டாக்கிய வாகனத்தின்

சாரதியிடமிருந்தும், அவ்வாகனத்தின் உரிமையாளரிடமிருந்தும் பெற்றுக்கொள்ள விபத்துக்குள்ளான மற்றைய வாகனதாரருக்கு உரிமையுண்டு.

மேலும் இவ்விபத்து நடைபெறும் போது அந்த வாகனத்தில் பிரயாணம் செய்து காயத்திற்குள்ளானவர்களுக்கு அவர்களது இழப்பீட்டுக்கு உரிய தொகையையும் பெற உரித்துண்டு.

இதில் கவனிக்கவேண்டிய முக்கியமான விதி ஒன்றுண்டு. விபத்து உண்டானதும் பொலிஸார் அதுபற்றிய வழக்கு ஒன்றை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வர். விபத்துக்குள்ளான இழப்பீடுக்கு ஆளாகியவருக்கும் அறிவித்தல் கொடுப்பார். அப்போது இழப்பீட்டுக்கு ஆளானவர் நீதிவான் நீதிமன்றத்தில் விபத்தை உண்டாக்கிய சாரதி குற்றத்தை ஒப்புக்கொள்வதுடன் இழப்பீட்டுக்கு ஆளானவருக்கு ஒரு சிறுதொகையையும் கொடுப்பது வழக்கம். அப்படியான சந்தர்ப்பத்தில் நீதிவான் நீதிமன்ற வழக்கு சட்டத்தரணிகளின் முயற்சியால் முடிவுக்கு கொண்டு வரப்படும். ஆகவே பாதிப்புக்குள்ளானவர் நீதிவான் நீதிமன்றத்தில் பாரிய தொகை ஒன்றை பெறமுடியாது போய்விடும்.

அத்துடன் சாரதிக்கும் சிறியதொரு தண்டனையுடன் விடுதலை கிடைக்கும். இதன் பின்னர் இழப்பீட்டுக்கு உள்ளான சிலர் வேறு நடவடிக்கை ஒன்றையும் எடுப்பதில்லை. இது தவறாகும்.

ஏனெனில் அவ்வாறு இழப்பீட்டுக்கு உள்ளானவர் விபத்து நடந்து 2வருடக் காலங்களுக்கிடையில் மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்து தமது இழப்பீட்டுக்குரிய தொகையை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்தும் அல்லது சாரதி, வாகன உரிமையாளரிடமிருந்தும் பெற்றுக்கொள்ள சட்டம் இடமளிக்கிறது. இதை அறியாததால் பலர் மாவட்ட நீதிமன்ற வழக்கை தாக்கல் செய்வதில்லை. நீதிவான்

நீதிமன்றத்தில் சாரதி கொடுக்கும் சிறு தொகையுடன் சும்மா இருந்து விடுகின்றனர்.

ஆகவே சகலரும் விளங்கிக்கொள்ள வேண்டியது என்னவெனில் நீதிவான் நீதிமன்ற வழக்கை பொலிஸார் தாக்கல் செய்து விபத்தை உண்டாக்கிய சாரதிக்கு தண்டனையை பெற்றுக் கொடுக்கின்றனர். மாவட்ட நீதிமன்றத்தில் விபத்திற்குள்ளானவரே வழக்கைத் தாக்கல் செய்து நிவாரணத்தைப் பெறவேண்டும் என்று சட்டம் இருக்கிறது.

இந்த வழக்கை இரண்டு வருட காலத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டும். சட்டஉதவி நிறுவனங்கள் இவ்வழக்கை இலவசமாக செய்து கொடுக்கின்றன. இதனைப் பயன்படுத்தலாம். செலவு இல்லாமல் கிடைக்கும் பணத்தை அறிவு இன்மையால் பலர் இழக்கின்றனர். சட்டத்தரணி ஒருவரிடம் இதற்குரிய ஆலோசனையைப் பெற்று வழக்கை தாக்கல் செய்யலாம். இன்னுமொரு முக்கியமான விடயத்தையும் இவ்விடத்தில் கூறவேண்டும். சிலர் மத்தியில் ஒரு பிழையான அபிப்பிராயம் இருக்கிறது. நீதிவான் நீதிமன்றத்தில் வைத்து ஒரு சிறு அற்பதொகையை வாங்கி விட்டதால் மீண்டும் சாரதியிடமிருந்து அல்லது வாகனச் சொந்தக்காரரிடமிருந்து இழப்பீட்டை பெறமுடியாது என்பதும் நீதிவான் நீதிமன்றத்தில் சாரதி குற்றவாளியானார். மட்டுமே மாவட்டநீதிமன்றத்தில் இழப்பீட்டை பெற வழக்கைத் தாக்கல் செய்யலாம் என்பதுமாகும்.

இது தவறு. நீதிவான் நீதிமன்ற வழக்கிற்கும் மாவட்ட நீதிமன்றத்தில் தொடரும் இழப்பீட்டு வழக்கிற்கும் தொடர்பே கிடையாது. மாவட்ட நீதிமன்றத்தில் இரண்டு வருடத்திற்கிடையில் வழக்கைத் தாக்கல் செய்து இழப்பீட்டை பெறலாம்.

இனி பெருந்தெருக்களில் ஏற்படும் வாகன விபத்தால் உயிர் சேதமும், உடல் சேதமும் ஏன் ஏற்படுகின்றன எனப்பார்ப்போம். மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டம் சாரதி ஒருவர் எவ்வாறு வீதிகளில் வாகனத்தை செலுத்தும்போது விபத்துக்களை தவிர்க்கலாம் என்று வழிகாட்டியுள்ளது. முற்றாக விபத்தை தவிர்க்க முடியாவிட்டாலும் விபத்தை அவ்வழிகாட்டிகளைப் பின்பற்றுபவரால் தவிர்க்கலாம். ஆனால் சாரதிகள் அதனை பின்பற்றாததாலேயே விபத்துக்கள் நடக்கின்றன. அவ்வழிகாட்டிகளில் ஒன்று ஒரு வாகனத்தை இன்னுமொறு வாகனம் முந்தும் போது (Over Taking) மிகக் கவனமாக அதனைச் செலுத்தவேண்டும் என்று கூறுகிறது. இரண்டு வாகனங்கள் ஒன்றுக்கு ஒன்று ஒரே திசையில் செல்லும்போது ஒன்றை ஒன்று இடப்பக்கத்திற்கு செல்லவேண்டும்.

முந்துகின்ற வாகனத்திற்கு இடம் கொடுக்கவேண்டும். முந்துகின்ற வாகனம் தனக்கும் முன்னால் சென்று கொண்டு இருக்கும் வாகனத்திற்கு இடையில் உள்ள தூரத்தை கவனித்து எதிர்த்திசையால் ஏதாவது வாகனம் வருகிறதா? எனப் பார்ப்பதுடன் பாதசாரிகளின் கடவைக்கோடுகள் (மஞ்சள்) இருக்கின்றனவா, வேறு சமிக்ஞைகள் இருக்கின்றனவா எனப் பார்த்து ஆபத்து ஒன்றுமில்லை என்று கண்டால் மட்டுமே முன்னால் சென்று கொண்டு இருக்கும் வாகனத்தை கடக்கவேண்டும்.

இதனைக் கட்டாயம் கவனிக்கவேண்டும். மாபாஹே என்ற இடத்தில் பாடசாலை மாணவர்கள் பலர் ஒரே சந்தர்ப்பத்தில் இறந்தது இவ்வாறு கவனிக்காமல் பின்னால் வந்த பஸ்வண்டி முன்னால் சென்று வாகனத்தை கடக்கும் போது மாணவர்கள் வரிசையாக ஒரு பக்கத்தில் இருந்து மறுபக்கத்திற்கு கடந்து வந்து கொண்டிருந்தன. முன்னால் சென்ற வாகனம் மாணவர்கள் கடப்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது.

பின்னால் வந்து விபத்தை உண்டாக்கிய பஸ்வண்டி அவசரமாக நிறுத்திவைத்திருந்த வண்டியை முந்துவதற்கு நடு வீதிக்கு வந்ததால் மாணவர்களாலோ பஸ்வண்டி சாரதியாலோ ஒன்றுமே செய்யமுடியாமல் போனதுடன் பலர் உயிர் இழந்தனர் பஸ்ஸூம் தீவைக்கப்பட்டது.

இரண்டாவது வழிகாட்டி வேகம் பற்றியது. வாகனங்களின் வேகம் நகரத்திற்கும் புறநகரங்களுக்கும் வேறுபட்டது. ஆகவே அதற்கு அமைய வாகனங்களை செலுத்தவேண்டும். மேலும் பெருந்தெருக்களில் கோடுகள் கீறப்பட்டுள்ளதை நீங்கள் கவனித்துப்பார்க்க இன்னும் சில இடங்களில் ஒரு கோடு இடைவெளியில்லாமல் கீறப்பட்டிருக்கும். இக்கோடுகள் இருக்கும் பகுதியில் ஒருவாகனத்தை இன்னுமொரு வாகனம் முந்தக்கூடாது. இதை தவிர்க்கவேண்டும். இன்னுமொரு வழிகாட்டி வாகனத்திற்கு இருக்க வேண்டிய லைற் (Light) இல்லாமல் வாகனத்தை செலுத்தக்கூடாது என்பதால் உரிய வெளிச்சம் இல்லாமல் அல்லது Parking Light Break Light இல்லாமல் வாகனத்தை செலுத்தக்கூடாது என்பதாகும்.

இவ்வாறு பல வழிகாட்டிகளை கொடுத்தும் வாகனங்கள் தினந்தோறும் மோதுண்டு உயிர் இழப்புக்கள் ஏற்படுவதையும் அவயவங்கள் இழப்பதையும் நாம் காண்கின்றோம். ஒரு விபத்தால் ஒருவர் அல்லது பலர் உயிர் இழந்தால் அல்லது கவனக்குறைவால் வாகனத்தை செலுத்தி ஒருவரது அவயவங்களை இழக்கும் விபத்தில் உண்டாக்கினால் அந்த சாரதிக்கு இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் 298 ஆம் பிரிவன் கீழ் கவனமின்மையால் நடந்த மரணம் (Causing Death by Negligence) என்ற குற்றச்சாட்டை பொலிசார் தாக்கல் செய்யலாம். இதற்கு ஐந்து வருடகாலச் சிறைத்தண்டனையும் அபராதத் தொகையும் விதிக்கப்படும். மிகச் சமீபத்தில் ஒரு மேல் நீதிமன்றம் மேற்படி தண்டனையை விதித்தது.

இவ்வாறான விபத்தில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில் இறந்தவரின் அல்லது அவயவங்களை இழந்தவரின் வாரிசுக்கள் அவரின் இழப்பால் இழக்கும் இழப்பீட்டு வருமானத்தை பெறுவதற்கு முடியும் என்பதாகும். அவர்களுக்கு வழக்கெழு காரணம் எழுகிறது. மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்து இழப்பீட்டை பெறலாம். வாரிசுகள் வழக்கை தாக்கல் செய்வதில்லை.

## பாலங்களுக்கு ஏற்படும் நட்டங்கள் மின்சாரத் துாண்களுக்கு ஏற்படும் நட்டங்கள்

பல விபத்துக்கள் நடைபெறும் போது பெருந்தெருக்களில் உள்ள பாலங்களின் இரு பக்கங்களிலுள்ள பாதுகாப்பு கம்பிகள் உடைபடுவதுண்டு. சில சந்தர்ப்பங்களில் மின்சார கம்பங்கள் தாக்கப்பட்டு உடைவதும் உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் அவற்றிற்குரிய இழப்பீட்டுத் தொகையை வாகனச்சாரதி உரிய நிறுவனத்திற்கு செலுத்தவேண்டும்.

புதிதாக போடப்பட்டுள்ள வீதிகளில் உள்ள பாலங்களுக்கும் சேதம் ஏற்படின் அதனை பெருந்தெருக்கள் அதிகாரசபைக்கே செலுத்த வேண்டும். இவை செலுத்தப்பட்ட பின்னரே நீதிவான் வழக்கை விசாரணைக்கு எடுப்பார்.

இதுவரையும் வாகன விபத்துக்கான காரணங்களையும் அதற்கு என்ன நடைபெறுகிறது என்பதையும் வழக்குகள் தாக்கல் செய்யவேண்டிய நீதிமன்றங்களையும் காலங்களையும் பார்த்தோம். இனி வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்படுவது எப்படி எனப்பார்ப்போம். அதற்கு முன்னர் வழக்குத் தாக்கல் செய்து நிவாரணம் பெற வேண்டுமானால் முழுவதும் என்ன நிலையில் இருக்கவேண்டும் என சட்டம் கூறுகிறது எனப் பார்த்தால் விபத்துக்குள்ளானவர் அந்த விபத்திற்கு உடன் கவனமின்மையாளராக இருக்கக்கூடாது என்பதாகும். உடன் கவனமின்மை என்பதற்கு பல விளக்கங்கள் கொடுக்க

முடியுமாயினும் அதன்பொருள் என்னவென இலகுவில் கூறினால் விபத்தைத் தவிர்ப்பதற்கு சந்தர்ப்பம் இருந்தும் அதனை தவிர்க்காது விபத்திற்கு உதவினார் என்பதேயாகும். உடன் கவனமின்மை என்ற பாதுகாப்பு வழக்கை தள்ளுபடி செய்யாது. ஆனால் இழப்பீட்டை குறைக்க உதவி செய்யும் உதாரணமாக *சில்வா எதிர் குணவர்தன* என்ற வழக்கில் மேலதிக இரண்டு கார்கள் மோதியது சம்பந்தமான வழக்காகும்.

வழக்காளிக்கு மாவட்ட நீதிமன்றம் ரூபா 50,000 செலுத்துமாறு கட்டளையிட்டது. ஆனால் உயர் நீதிமன்றம் எதிராளியில் உடன் கவனமின்மை இருந்ததால் இழப்பீட்டை 30,000 ரூபாவாக மாற்றியதைக் காட்டலாம். ஆகவே இழப்பீட்டு வழக்கில் பெருந்தொகைப் பணத்தை பெறவேண்டுமானால் சாட்சியங்களும் உடன் கவனமின்மை இல்லாமையும் அவசியமாகும் எனலாம்.

**இழப்பீட்டைப்பெற நடைபெற வேண்டிய தேவைப்பாடுகள்.**

வாகனவிபத்து ஒன்று நடைபெற்றவுடன் உடனடியாக பொலிஸில் முறைப்பாடு செய்ய வேண்டும். முறைப்பாடானது சம்பவம் நடைபெற்றவுடன் செய்வது வழக்கிற்கு மிகப் பயன்தரும். அத்துடன் பொலிசார் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று வாகனத்தின் நிலைமையையும் வீதியில் உள்ள தடயங்களையும் மற்றும் விபத்தை நேரில் கண்டவர்களின் சாட்சியத்தையும் பெற அது உதவும். அத்துடன் வாகனத்தின் சேதத்தையும் மற்றும் தகவல்களையும் பெறமுடியும். விசேடமாக வாகனத்தின் சில்லுகள் தேய்வுபட்டு வழுக்கும் தன்மையுடையதா? அன்றைய தினம் வீதி மழைக்கு நனைபட்டு வழுக்கக்கூடிய தன்மை இருந்ததா? என்பன போன்ற தகவல்களையும் பெறமுடியும். சாரதியின் பெயர், அவரது நிலை, வாகனச்சொந்தக்காரரின் பெயர் என்பவற்றையும் விலாசத்தையும் அறிய இது உதவும். ஆகவே

முதலில் செய்யவேண்டிய வேலை பொலிஸில் புகார் செய்வதாகும்.

பொலிஸில் புகார் செய்வதால் இன்னும் ஒரு தகவலையும் பெறலாம். சிலவேளைகளில் வாகனச் சொந்தக்காரன் அதாவது மோட்டார் வாகனத்திணைக்களத்தில் பதிவு செய்தவர் அந்த வாகனத்தை இன்னுமொருவருக்கு கை மாற்றியிருக்கலாம். அது விண்ணப்பம் ஒன்றில் செய்யப்பட்டிருக்கலாம். இன்னும் அந்த form கந்தோருக்கு அனுப்பப்பட்டு பதிவு செய்யப்படாமல் இருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் வழக்கை புதிய சொந்தக்காரனுக்கு எதிராக தாக்கல் செய்து வெற்றி பெற முடியாது. எனவே மூன்று பெயருக்கு எதிராகவே அதாவது பதிவுள்ளவர் பெயர், பதிவுள்ளவர் விற்றுவிட்டு கையொப்பமிட்டு கொடுத்துள்ள போர்மை வைத்துள்ளவர் பெயர், சாரதி ஆகிய மூவரின் பெயருக்கும் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். பல வழக்குகளில் வாகனத்தை சாரதிக்கு செலுத்துவதற்கு கொடுத்தவர் ஒருவராகவும் வாகனச் சொந்தக்காரர் இன்னுமொருவராகவும் இருக்கலாம். இத்தகைய சந்தர்ப்பத்தில் யாராவது ஒருவரை விட்டுவிட்டு வழக்கு தாக்கல் செய்தால் வெற்றிபெறுவது கஷ்டம். ஆகவே வாகனம் விபத்துக்கு உள்ளாகும்போது யாரிடம் இருந்தது என்பது கண்டறியப்பட வேண்டும். ஏனெனில் வாகனச் சொந்தக்காரரின் கட்டுப்பாட்டிற்குள்ளும் அவரது சேவைக்குள்ளும் சேவை நேரத்திலும் சாரதியால் விபத்து நடந்து இருந்தால் தான் சொந்தக்காரன் இழப்பீடு செலுத்தவேண்டும் என சட்டம் கூறுகிறது.

மாவட்ட நீதிமன்றத்தில் இழப்பீட்டு வழக்கை தாக்கல் செய்ய இரண்டு வருடகாலம் இருப்பது உண்மையேயாயினும் இயன்றளவு விரைவாக வழக்கைத் தாக்கல் செய்யவேண்டும். சிலவேளை பிழையானவர்களின் பெயரில் வழக்கைத்தாக்கல் செய்திருந்தால் அதனை திருத்தி பின்னர்

சரியானவர்களுக்குகெதிராக வழக்கை இரண்டு வருடகாலப் பகுதிக்குள் தாக்கல் செய்ய இது உதவுகிறது.

சட்டத்தரணியின் நோட்டீஸ் (Letter Demand) அனுப்பப்பட வேண்டும். உரித்தாளருக்கும் மற்றும் உரியவர்களுக்கும் அனுப்பப்படவேண்டும். இதில் இழப்பீடு கேட்பதற்கு காரணத்தையும் தொகையையும் குறிப்பிடவேண்டும். இவர்கள் ஒன்றாகவும் தனித்தனியாகவும் இத்தொகைக்கு பொறுப்பு உள்ளவர்கள் என்று கூறவேண்டும். இதன் பிரதி ஒன்று காப்புறுதி நிறுவனத்திற்கும் அனுப்பப்பட வேண்டும்.

சாரதிக்கு அனுப்பும் நோட்டீஸில் குறித்த விபத்து நடப்பதற்கு காரணம் சாரதியின் கவனமின்மையும், ஆபத்தை தவிர்க்காமல் வாகனத்தை செலுத்தியமையும், வீதியில் நடப்பவர்களுக்கு செலுத்த வேண்டிய கவனத்தை அவர் செலுத்தாதமையே விபத்திற்கு காரணம் எனக்கூறப்படவேண்டும். இதனால் வழக்காளிக்கு உள உடல் பாதிப்பு ஏற்பட்டதுடன் பண அளவிலும் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று காட்டவேண்டும்.

இறுதியில் இந்த அறிவித்தல் கிடைத்து மூன்று வாரங்களுக்கிடையில் இழப்பீடு செலுத்தாவிட்டால் சட்டம் நடவடிக்கை எடுக்கப்படும் என கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

வாகன உரிமையாளருக்கு அனுப்பும் நோட்டீஸில் சாரதியிடம் கேட்ட தொகையை குறிப்பிடுவதோடு வாகனத்தை சாரதி செலுத்தும் போது உரிமையாளரின் சேவையாளராகவும் அவருக்கு சேவையாற்றும் வேளையிலேயே இவ்விபத்து நடந்தது என்றும் கூறவேண்டும். மேலும் அவரது அறிவுறுத்தலின் போதே கவனம் செலுத்தப்பட்டது என்றும் விபத்து நடந்தது என்றும் கட்டாயம் கூறவேண்டும்.

மேலும் மேற்படி இழப்பீட்டை செலுத்தத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கெதிராக தனித்தனியாகவும் கூட்டாகவும்

இழப்பீட்டை கேட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கட்டாயம் கூறவேண்டும்.

**வழக்கில் கவனிக்க வேண்டிய அம்சங்கள்**

1. சாரதியையும் வாகன உரிமையாளரையும் கட்டாயம் வழக்கில் எதிராளிகள் ஆக்கவேண்டும்.
2. விபத்து நடந்த இடத்தின் நியாயாதிக்கத்தை கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவேண்டும்.
3. நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டது குறிப்பிடப்பட வேண்டும்.
4. வழக்கை தாக்கல் செய்ய 7 நாட்களுக்குள் காப்புறுதி நிறுவனத்திற்கு மேற்படி இழப்பீட்டுத் தொகையை 7 நாட்களுக்குள் செலுத்தவேண்டும் என அறிவித்தல் கொடுக்க வேண்டும். தவறினால் காப்புறுதி நிறுவனத்திற்கு இழப்பீடு கொடுக்கவேண்டும் என்று கூறியுள்ள விதி (105) செல்லாமல் போய்விடும்.

மேற்கூறியபடியே வாகன விபத்துக்கு இழப்பீடுபெறலாம்.

xxxxxxxxxx